பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

# இயேசு விடுவிக்கிறார்

சகோ. மோகன் சி. லாசரஸ்

மரம் : 38 கனி : 9 செப்டம்பர் - 2017




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சகோதரனிடமிருந்து...

**இ**யேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!

இம்மட்டும் உதவி செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! கடந்த நாட்களில் கர்த்தர் கூட இருந்து நடத்தினார். கர்த்தரை **துதியுங்கள்!** உங்கள் ஜெபத்தின் வல்லமையினால் அமெரிக்கா மற்றும் கனடா தேச ஊழியங்களை முடித்து, சுகமாய் என்னை திரும்பச் செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

ஜெபிக்கிற மக்களை எழுப்பவும், சுவிசேஷத்தின் வல்லமையை அறிவிக்கவும் கர்த்தர் என்னைக் கொண்டு சென்றார். தான் விரும்பியபடியே தேசத்திற்காக ஜெபிக்க, அனேகரை கர்த்தர் சந்தித்தார்! ஜெப ஆவியை ஊற்றினார். வேத வசனத்தை அறிவித்த இடங்களில் எல்லாம் அனேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டார்கள்! கர்த்தரைத் **துதியுங்கள்!**



நீண்ட தூரப் பிரயாணத்தில் கர்த்தருடைய கிருபை என்னைத் தாங்கியது. காரணம் நீங்கள்தான்! **உங்கள் ஜெபம்தான் என்னைத் தாங்கியது.** அமெரிக்கா, கனடா தேச ஊழியங்களின் பலனை, கர்த்தர் உங்கள் கணக்கில் எழுதுவார்.

இம்மாதம், நம் இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்க **திருப்பத்தூர் உபவாச முகாம், சிங்கப்பூர், மலேசியா, மியான்மர்** போன்ற தேசங்களின் எழுப்புதலுக்காக ஜெபிக்க **உபவாச ஜெபங்கள்** மற்றும் **நற்செய்திக் கூட்டங்கள், வாலிபர் முகாம்**கள் போன்ற ஊழியங்கள் நடக்க இருக்கிறது. **இந்த ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.**

ஒவ்வொரு மாதமும் **கொழும்பு பட்டணத்தில்** நடைபெற்று வரும் **திறப்பின் வாசல் ஜெபத்தை தேவன் அற்புதமாக நடத்தி வருகிறார்.** கட்டாயமாக இந்த ஜெபத்தில் நீங்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இலங்கை தேசத்திலே நாம் செய்து வருகிற ஊழியங்களுக்காக ஜெபித்து, கொடுத்து தாங்கி வருகிற உங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிக்க **ஜெபிக்கிறேன்.**

**நம் தேசத்தில் நடக்கிற காரியங்களை உற்று கவனியுங்கள்.** ஒவ்வொரு காரியத்தைக் குறித்தும் ஜெபத்திலே கர்த்தருக்குத் தெரியப்படுத்துங்கள்! **கர்த்தர் ஜனங்களை நினைத்தருள ஜெபியுங்கள்.**

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 22,000 கிராமங்களுக்கும் சென்று, வீடு வீடாக, வீதி வீதியாக சுவிசேஷத்தை அறிவிக்க திட்டமிடுகிறோம். இன்னும் **5 வருடங்களில், 2 கோடி குடும்பங்களுக்கு** இயேசு கிறிஸ்துவையும், கர்த்தருடைய வார்த்தையையும் (புதிய ஏற்பாடு) கொடுக்கத் தீர்மானித்து, ஜெபித்து ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். அதாவது வருகிற 2018 முதல், 2022 வரை, 5 வருடங்களில் இதைத் தீவிரமாகச் செய்து முடிக்க கர்த்தருக்குள் தீர்மானித்திருக்கிறோம். **இதற்கு உங்கள் உதவி எங்களுக்குத் தேவை.**

**உங்கள் ஜெபமும், உதவியும் தேவை.** நாம் சேர்ந்து செயல்பட்டால்தான் இதைச் செய்து முடிக்க முடியும். **ஜெபியுங்கள்.** கர்த்தர் உங்கள் உள்ளத்தில் **ஏவுகிறபடி செயல்படுங்கள்.** நாம் சேர்ந்து ஜெபித்து செயல்பட்டால், தமிழ்நாடே சுவிசேஷ மயமாகி விடும்! நம் **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியக் குடும்பத்திற்காக **ஜெபித்துக் கொள்ளுங்கள்.** தேவனுடைய கூடார வேலைகளுக்காகவும் **ஜெபியுங்கள்.**

நாங்களும் **உங்களுக்காக ஜெபிக்கிறோம்.**

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"மனிதர்களை நம்பி, நான் வெட்கப்பட்டுப் போனேன்! எனக்கு உதவி செய்வதாக வாக்குப் பண்ணிய நண்பர்களை நம்பி, நான் வெட்கப்பட்டுப் போனேன்! எனக்கு என் பிள்ளைகள் இருக்கிறார்கள்! எனக்காக எல்லாவற்றையும் அவர்கள் செய்வார்கள் என்று நம்பி, வெட்கப்பட்டுப் போனேன்!" என்று, தங்கள் உள்ளத்தில் ஏங்கித் தவிக்கும் ஆத்துமாக்கள் இன்றைக்கு ஏராளம்!

ஆம்! நம்முடைய வாழ்க்கையில் வெட்கப்படும்படியான சூழ்நிலைகள் வரும்போது, நம் உள்ளம் அதிகமாய் சோர்ந்து போய் விடுகிறது. "இருப்பதை விட, செத்து மடிவது நல்லது." என்று கூட நம் உள்ளம் எண்ணுகிறது.

ஒருவேளை இன்றைக்கு, உங்கள் உள்ளம் இப்படியாக அலைமோதிக் கொண்டிருக்கலாம்!

"கர்த்தரை நம்பித்தானே நான் இந்தக் காரியத்தில் இறங்கினேன்! அவரை நம்பித்தானே இந்தத் திருமணக் காரியத்தை ஒழுங்கு செய்தேன்! அவரை விசுவாசித்துத்தானே இந்தத் தொழிலை ஆரம்பித்தேன்! 'கர்த்தர் எனக்காக எல்லாவற்றையும் செய்வார்!' என்று சொன்னாயே! இப்பொழுது உனக்கு என்ன சம்பவித்தது?' என்று, மற்றவர்கள் என்னை கேலி பேசும் சூழ்நிலை வந்து விடுமோ?" என்று எண்ணி, இன்றைக்கு உங்கள் ஆத்துமாவிலே சோர்ந்து போய் இருக்கிறீர்களா?

**கலங்காதீர்கள்!**

**"உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்;" (ஏசாயா 61:7) என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறார்.**

**"பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை;..." ஏசாயா 54:4.**

இந்த வாக்குத்தத்தம் நம்முடைய உள்ளத்திற்கு எவ்வளவு பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கிறது!

ஆனால், "யார் வெட்கப்பட்டுப் போவதில்லை?" என்பதைப் பற்றியும் கர்த்தர் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லி வைத்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தருடைய பிள்ளைகள், வெட்கப்பட்டுப் போவதில்லை!

**"...என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை."** யோவேல் 2:26,27.

"என் ஜனங்கள், என்னை ஏற்றுக் கொண்டவர்கள், என்னால் இரட்சிக்கப்பட்டவர்கள், என் பிள்ளைகள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை!" என்று கர்த்தர் சொல்கிறார்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டது உண்மையானால், அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு, அவருடைய பிள்ளையாக நீங்கள் இருப்பது உண்மையானால், நீங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை. **பயப்படாதீர்கள்!**

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, **அவருக்காக வாழ்ந்தவர்கள் வெட்கப்பட்டுப் போனதாக சரித்திரமே கிடையாது!**

கடந்த 1980ம் வருடம், சிறு பிள்ளைகளுக்கான ஒரு எழுப்புதல் முகாமை நடத்த கர்த்தருக்குள் தீர்மானித்து, அதற்கான எல்லா ஒழுங்குகளையும் செய்து வந்தோம். முகாம் நடப்பதற்கு முந்தின நாள்வரை மழை பெய்து கொண்டிருந்தது.

ஆகவே, இந்த ஊழியத்தின் மீது பொறாமை கொண்ட பலர், "இவர்கள் எப்படி முகாமை நடத்துவார்கள்? பார்க்கலாம்!" என்று பேச ஆரம்பித்தார்கள்.

மற்றொரு பக்கம், முகாமிற்கு வரக் கூடிய சிறு பிள்ளைகளை தடை பண்ண, பிசாசானவன் பல காரியங்களைச் செய்து கொண்டிருந்தான். இவைகளை எல்லாம் நான் கேள்விப்பட்டபோது, என் ஆத்துமா அதிகமாக எனக்குள் சோர்ந்து போனது.

"சுமார் 500 சிறு பிள்ளைகள் வருவார்கள்!" என்று கர்த்தருக்குள் விசுவாசித்து, அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தோம். முகாமிற்காக தேவ ஊழியர்களும் வரவழைக்கப்பட்டு விட்டார்கள்.

"ஒருவேளை மழை வந்து விட்டால், என்ன செய்வது? அல்லது சிறு பிள்ளைகள் முகாமிற்கு வரவில்லை என்றால், என்ன செய்வது?" என்று என் உள்ளம் கலங்கியது.

முகாமிற்கு முந்தின நாள் மாலை நேரத்தில் தேவ சமூகத்தில் நான் முழங்கால்படியிட்டு, என் மன பாரத்தை எல்லாம் கர்த்தரிடத்தில் சொன்னேன். அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் என்னை பெலப்படுத்தினார்.

என் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து, "நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வேன்; நீ பயப்படாதே." என்று சொல்லி, என்னை மிகவும் தைரியப்படுத்தினார்.

மறுநாள் நடைபெற்ற முகாமில் கர்த்தருடைய அற்புதம் விளங்கியது! வானத்திற்கும், பூமிக்கும் தேவனாகிய கர்த்தர் மழையை நிறுத்தி, அன்றைய தினம் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார்!

அந்த முகாமிற்கு சுமார் 500க்கும் அதிகமான சிறு பிள்ளைகளை கர்த்தர் கூட்டிச் சேர்த்தார். அவருடைய ஊழியத்திற்கு விரோதமாகப் பேசியவர்கள் எல்லோரும் வெட்கப்படும்படியாக, அந்த முகாமிலும் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார். அவருடைய பிள்ளைகளாகிய நாங்கள் வெட்கப்பட்டுப் போய் விடாதபடி, கர்த்தர் எங்களைக் காத்துக் கொண்டார்.

இன்றைக்கு நீங்களும் கூட, இப்படிப்பட்ட ஏதாவது ஒரு சூழ்நிலையில் கலங்கிக் கொண்டிருக்கிறீர்களோ? மற்றவர்களுடைய வார்த்தைகள் உங்கள் உள்ளத்தை வேதனைப்படுத்துகிறதோ?

**பயப்படாதீர்கள்!** நீங்கள் அல்ல! உங்களுக்கு விரோதமாகப் பேசியவர்களே வெட்கப்படுவார்கள்!

கர்த்தருக்கென்று வாழ்கிறவர்கள், **"...ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப்போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள்."** சங். 37:19.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, **அவருக்கென்று வாழ்கிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதே இல்லை!**

ஒருவேளை, இதுவரை நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பீர்களானால், இன்றைக்கு உங்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பி, ஒருபோதும் நம்மை வெட்கப்படுத்தாத அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் அவரை மாத்திரமே பின்பற்றி வாழும்போது, எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் வெட்கப்படாதபடி உங்களை அவர் காத்துக் கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசிப்பவர்கள், வெட்கப்பட்டுப் போவதில்லை!

"அவரை (இயேசு கிறிஸ்துவை) **விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது."** ரோமர் 10:11.

இயேசு கிறிஸ்துவை உறுதியாய் விசுவாசித்திருந்த ஒருவரும் வெட்கப்பட்டுப் போனதில்லை. பரிசுத்த வேதாகமம் முழுவதும் இந்த உண்மையை நாம் பார்க்கிறோம். கர்த்தரை விசுவாசித்துப் புறப்பட்டு வந்த **ஆபிரகாம்** வெட்கப்பட்டுப் போகாதபடி, கர்த்தர் அவருக்கு **ஈசாக்கைக்** கொடுத்தார்!

கர்த்தரை விசுவாசித்து கீழ்படிந்த **மோசேயைக்** கொண்டு, கர்த்தர் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனை வெட்கப்படுத்தினார்!

கர்த்தரையே நம்பியிருந்த **தானியேலை** வெட்கப்பட விடாதபடி, கர்த்தர் சிங்கத்தின் வாயைக் கட்டினார்!



அதேபோல, நீங்களும் கர்த்தரையே விசுவாசித்து ஜீவிப்பது உண்மையானால், கர்த்தர் உங்களையும் வெட்கப்பட விட மாட்டார்.

**நீங்கள் விசுவாசித்திருக்கிற கர்த்தர், உங்களை வெட்கப்படுத்தாதவர் என்பதை,** நீங்கள் எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்.

கடந்த 1984ம் வருடம், முதன்முதலாக எனக்கு வெளி நாட்டிலிருந்து ஊழிய அழைப்பு வந்தது. பஷ்ரைன் தேசத்திலிருந்த தேவ பிள்ளைகள் என்னை அங்கு ஊழியத்திற்கு அழைத்திருந்தார்கள்.

திருவனந்தபுரத்திலிருந்து மும்பைக்கும், மும்பையிலிருந்து பஷ்ரைனுக்குமான விமான டிக்கெட்டை எடுத்து எனக்கு அனுப்பி இருந்தார்கள். அதற்கு முன்புவரை, நான் விமானத்தில் பயணம் செய்ததில்லை.

குறிப்பிட்ட அந்த நாளில் அதிக ஜெபத்தோடு புறப்பட்டு, விமான நிலையத்திற்குப் போய் சேர்ந்தோம். நிலைய அதிகாரிகள் என்னுடைய டிக்கெட்டை வாங்கிப் பார்த்து விட்டு, "உங்கள் டிக்கெட் O.K. செய்யப்படவில்லை. ஆகவே, நீங்கள் இன்றைக்குப் போக முடியாது." என்று சொல்லி விட்டார்கள். 'டிக்கெட் O.K. செய்யப்பட வேண்டும்.' என்பதைப் பற்றியெல்லாம் எனக்கு அப்போது தெரியாது.

அந்த விமானத்தைத் தவற விட்டால், குறித்த நேரத்தில் நான் பஷ்ரைன் தேசத்திற்குப் போக முடியாது. அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிற கூட்டமும் பாதிக்கப்படும்.

சில நிமிடங்கள் எனக்குள் கலக்கம் வந்தாலும், "கர்த்தர்தான் இந்த ஊழியத்தை ஒழுங்கு செய்தார். அவரே என்னைக் கொண்டு போய் சேர்ப்பார்!" என்கிற விசுவாசம் எனக்குள் உண்டாயிற்று.

அந்த விமான நிலையம் முழுவதும் மக்களால் நிறைந்திருந்தது. "நான் எப்படியும் அந்த தேசத்திற்குப் போயாக வேண்டும். மும்பையில் இருந்து எனக்கு அடுத்த விமானம் இருக்கிறது." என்று, நான் அங்குள்ள அதிகாரிகளிடத்தில் சொன்ன போதிலும், "இந்த விமானத்தில் உங்களுக்கு இடமில்லை. ஏற்கெனவே 50 பேருக்கும் மேலாக Waiting Listல் இருக்கிறார்கள். வேண்டுமானால், உங்கள் பெயரையும் அந்த Waiting Listல் சேர்த்துக் கொள்கிறோம்." என்று சொல்லி, என் பெயரையும் குறித்து வைத்துக் கொண்டார்கள்.

அன்றைக்கு என்னை வழியனுப்பி வைக்க, என் மனைவியும், நமது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திலுள்ள சில சகோதரர்களும் வந்திருந்தார்கள். அவர்கள் அங்குள்ள சூழ்நிலையைப் பார்த்து விட்டு, "இன்றைக்கு விமானத்தில் போக முடியுமா?" என்று கேள்வி எழுப்பினார்கள்.

"என்னை ஏற்றாமல் இந்த விமானம் இங்கிருந்து போகாது. என்னை ஊழியத்திற்கு அழைத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, என்னை வெட்கப்பட விட மாட்டார். தைரியமாக இருங்கள்!" என்று சொல்லி, நான் அவர்களை தைரியப்படுத்த வேண்டியதாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருங்கள், அன்றைக்கு வர வேண்டிய அந்த விமானம் இரண்டு மணி நேரம் தாமதமாக வந்தது. ஆகவே, அந்த விமானத்திற்காகக் காத்திருந்த பலரும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போய் விட்டார்கள்.

அந்த விமானம் வந்ததும், Waiting Listல் உள்ள பெயர்கள் வாசிக்கப்பட்டது. அதிகமானோர் ஏற்கெனவே தங்களுடைய வீடுகளுக்குப் போய் விட்டபடியினால், எனக்கு அந்த விமானத்தில் இடம் கிடைத்தது!

விமானத்தில் ஏறி உட்கார்ந்ததும், என் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. நன்றியுள்ள இருதயத்தோடு கூட நான் கர்த்தரைத் துதித்துக் கொண்டே பிரயாணப்பட்டேன். எனக்காகவே கர்த்தர் அந்த விமானத்தை தாமதப்படுத்தி, அதில் எனக்கொரு இடத்தையும் உண்டாக்கிக் கொடுத்தார்!

கர்த்தர் என்னை வெட்கப்பட்டுப் போக விடவில்லை. நான் அவரை விசுவாசித்தபடியினால், அவர் என்னை வெட்கப்பட்டுப் போக விடவில்லை.

சூழ்நிலைகள் எல்லாம் உங்களுக்கு விரோதமாக மாறினாலும் **கலங்காதீர்கள்.** இன்னும் நீங்கள் **இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள், அவர் உங்களை வெட்கப்பட விடவே மாட்டார்.** பல சமயங்களில், பிசாசானவன் உங்கள் உள்ளத்தில் சந்தேகத்தை வைத்து விடுகிறான். நம்ப முடியாதபடி செய்து விடுகிறான்.

ஆனால் நீங்களோ, கர்த்தருடைய வல்லமையை மட்டுமே **நோக்கிப் பாருங்கள்.** அவரை மாத்திரமே **விசுவாசியுங்கள்.**

அப்பொழுது: "**கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்;**" (ஏசாயா 50:7) என்று நீங்களும் தைரியமாகச் சொல்லலாம்.

ஆம். உங்கள் **விசுவாசத்தில் நீங்கள் தளர்ந்து போகாதீர்கள்!** சூழ்நிலைகளைப் பார்த்து, **மனமுடைந்து போகாதீர்கள்!**

ஆபிரகாமை வெட்கப்படுத்தாத கர்த்தர், **உங்களையும் வெட்கப்படுத்த மாட்டார்!**

மோசேயை, யோசுவாவை வெட்கப்படுத்தாத கர்த்தர், **உங்களையும் வெட்கப்படுத்த மாட்டார்!**

கிதியோனை, சிம்சோனை வெட்கப்படுத்தாத கர்த்தர், **உங்களையும் வெட்கப்படுத்த மாட்டார்!**

தானியேலை, எலியாவை, எலிசாவை வெட்கப்படுத்தாத கர்த்தர், **உங்களையும் வெட்கப்படுத்த மாட்டார்!**

**பயப்படாதீர்கள்!** விசுவாசம் உள்ளவர்களாக இருங்கள்! **நீங்கள் வெட்கப்படுவதில்லை!**

# கர்த்தரில் நிலைத்திருக்கிறவர்கள், வெட்கப்பட்டுப் போவதில்லை!

"**...அவர் (கர்த்தர்) வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்.**" 1 யோவான் 2:28.

நம் அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து, மறுபடியும் வரப் போகிறார்! அவர் வரும்போது, அவரை வெட்கப்படாமல் சந்திப்பவர்களே பாக்கியவான்கள்!

அவரில் நிலைத்திருக்கிறவர்கள், அவருடைய வருகையில் வெட்கப்படுவதில்லை!

இந்த உலகத்தில் வெட்கப்படாமல் வாழ்வதை விட, **அவர் வரும்போது வெட்கப்படாமல் இருப்பதே மிக முக்கியமானதாகும்.**

அவர் வரும்போது, "மகனே(ளே), நீ எனக்காக வாழ்ந்தாய். இதோ, உனக்காக ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிற என்னுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசி." என்று உங்களைப் பார்த்து சொல்வாரேயானால், அதை விட ஒரு பெரிய சந்தோஷம் என்ன இருக்க முடியும்?

நீங்கள் வெட்கப்படாமல், அவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமானால், அவரில் நிலைத்திருக்க வேண்டும்.

அவரில் நிலைத்திரா விட்டால், அவர் வரும்போது வெட்கப்பட்டுப் கலங்குவீர்கள்.

ஆகவே, என்ன போராட்டம் வந்தாலும், என்ன சோதனை வந்தாலும், அவரில் உறுதியாய் நிலைத்திருங்கள்.

உலகத்தில் இருக்கும்வரை நமக்குப் பாடுகளும், உபத்திரவங்களும் உண்டு. ஆனாலும், அதற்கு நடுவிலும் இயேசு கிறிஸ்துவில் நாம் நிலைத்திருக்க வேண்டும்.

"**...துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.

அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்." (1 பேதுரு 1:6,7) என்ற கர்த்தருடைய வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள்.

ஜெபத்திலும், வேத வாசிப்பிலும் உறுதியாய் தரித்திருங்கள்.

இயேசு கிறிஸ்துவுக்காக வாழ்வதே, உங்கள் நோக்கமாய் இருக்கட்டும்.

# வெட்கத்தைச் சுமந்து தீர்த்த இயேசு கிறிஸ்து!

இன்றைக்கு, ஏதோ ஒரு காரியம் உங்களை 'வெட்கப்படுத்தி விடுமோ?' என்று எண்ணி கலங்குகிறீர்கள். உங்கள் வெட்கத்தை மாற்ற, இயேசு கிறிஸ்து வெட்கத்தைச் சுமந்து தீர்த்ததைப் பாருங்கள்:

**பிலாத்துவின் முன்பாக, அவர் கைகள் கட்டப்பட்டவராக நின்றார்!**



**ஏரோதுவுக்கு முன்பாக, பரியாசம் பண்ணப்பட்டார்! சேவகர்களால் அடிக்கப்பட்டார்! முகத்தில் துப்பப்பட்டார்! கள்ளராலும் நிந்திக்கப்பட்டார்!**

வெட்கப்படக் கூடிய இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம், அவர் பொறுமையாக சகித்தார்.

**எதற்காக தெரியுமா?**

**உங்களுடைய, என்னுடைய வெட்கத்தை மாற்றத்தான்!**

அந்த இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள். உங்கள் இருதயத்தின் வேதனை அவருக்கு நன்றாகத் தெரியும்.

அவரும் அந்த வழியே கடந்து சென்றிருக்கிறார். உங்களுக்கு உதவி செய்யவே, அந்தப் பாடுகளினூடே அவர் கடந்து சென்றார்.

**ஆகவே, உங்கள் காரியங்களை தைரியமாக அவரிடத்தில் சொல்லுங்கள்.**

உங்களை வெட்கப்பட விடாதபடிக்கு ஒரு அற்புதம் செய்வார்!

உங்கள் வெட்கத்திற்குப் பதிலாக, இரண்டத்தனையாக உங்களுக்குப் பலன் வரும்படியாக அவர் செய்வார்!

நீங்கள் இரண்டத்தனையான பலனைக் காண்பீர்கள்!

விசுவாசத்தோடு ஜெபியுங்கள்! நானும் உங்களுக்காக ஜெபிக்கிறேன்!



**அன்பின் தேவனே! உம்முடைய வாக்குத்தத்தத்திற்காக உம்மைத் துதிக்கிறேன்!**

**நீர் என்னை வெட்கப்பட விட மாட்டீர் என்று விசுவாசிக்கிறேன்!**

**வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையான பலனை எனக்குத் தருவீர் என்று விசுவாசிக்கிறேன்!**

**எத்தனை போராட்டங்கள், பிரச்சனைகள் வந்தாலும், நான் உம்மில் நிலைத்திருப்பேன்! உம்மை விட்டு விலகவே மாட்டேன்!**

**எனக்கு இந்தக் காரியத்தில் ஒரு அற்புதம் செய்யும்!**

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்...ஆமென்! ஆமென்!**

**வாக்கு மாறாத தேவனே, "வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையாகப் பலன் வரும்!" என்று நீர் கூறிய வாக்குத்தத்தத்தை, ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நிறைவேற்ற வேண்டும் என்று நான் இப்பொழுது ஜெபிக்கிறேன்.**

**என்னென்ன காரியங்களில், "வெட்கப்பட்டுப் போய் விடுவேனோ?" என்று எண்ணி, உமது பிள்ளைகள் கலங்குகிறார்களோ, அந்தந்தக் காரியங்களில் இப்பொழுதே அற்புதங்களைச் செய்வீராக!**

**காரியங்களை மாற்றுவீராக! வெட்கப்படாதபடி காத்துக் கொள்வீராக!**

**வெட்கத்திற்குப் பதிலாக, இரண்டத்தனையான பலன் வருவதாக!**

**நீர் அப்படியே செய்து விட்டதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்... ஆமென்! ஆமென்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுவும், நானும்!



என்னுடைய 40 ஆண்டு கால ஊழியப் பாதையிலும், என் தனிப்பட்ட வாழ்க்கையிலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னோடு கூட இருந்து நடத்தி வருகிற காரியங்களை, **'இயேசுவும், நானும்!'** என்கிற தலைப்பில், இப்பகுதியில் வெளியிட்டு வருகிறேன். இது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்று விசுவாசிக்கிறேன்.

கடந்த (2017) ஆகஸ்ட் மாத இதழில், "அதற்கான வாஞ்சை உங்களுக்குள் உண்டான பிறகு, அந்த இரவு ஜெபத்தில் பிரசங்கிக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகளால் தொடப்பட்டு, கர்த்தர் உங்களை வழி நடத்துவார் என்பதை உங்களால் அறிந்து கொள்ள முடிந்ததா?' என்கிற கேள்விக்கு நான் பதிலளிக்கும்போது, "...கர்த்தர் என்னோடு மிகத் தெளிவாகப் பேசியபடியினால், என்னுடைய கல்லூரிப் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டு, சென்னைக்கு வந்து, 'பாடி' என்கிற ஒரு இடத்தில் இருக்கிற ஆலயத்தில் சிறு பிள்ளைகளுக்கு மத்தியில்தான் முதன்முதலாக நான் ஊழியம் செய்ய ஆரம்பித்தேன்." என்று, கடைசியாகச் சொல்லி இருந்தேன்.

இதோ, **அதன் தொடர்ச்சி...**

இப்படிப்பட்டதான ஆவிக்குரிய புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், நமது சகோதரர் அவர்களுடைய ஆரம்ப கால ஊழியத்திலும், ஆவிக்குரிய வளர்ச்சியிலும் அனேக உதவிகளைச் செய்து வழி நடத்திய சகோ. மனாசே குணசேகரன் அவர்கள், நமது சகோதரர் அவர்களைப் பற்றிச் சொல்லும்போது...



ஆரம்பத்தில் நான் இருந்த திருச்சபையில், எல்லா வேலைகளையும் அங்குள்ள வாலிபர்கள்தான் செய்வார்கள். ஆலயத்தில் விரிப்புகளை விரிப்பது, மற்ற காரியங்களைச் செய்வது எல்லாமே அங்குள்ள வாலிபர்கள்தான். ஒரு வாலிபனாக இருந்த எனக்கும் அதில் அதிக ஆர்வம் இருந்ததினால், நானும் அதில் அதிக ஈடுபாடு உள்ளவனாக இருந்தேன்.

நமது சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, அந்த நம்பிக்கைக்குள் வந்து கொண்டிருந்த, அவருடைய ஆரம்பக் கட்ட நாட்கள்!

பாருங்கள், ஒரு விதையை முளைக்கப் போட்டு விட்டு, தண்ணீர் ஊற்றியவுடன், அது சிறிய ஒரு செடியாக முளைத்து வரும். அந்தச் செடி பெரிதாக வளர்வதற்கு, தொடர்ந்து அதற்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும். சில நேரங்களில், கொஞ்சம் தண்ணீர் கொடுத்தால்கூட, அதிக தாகம் உள்ளவர்கள் வேகமாக வாங்கிக் குடிப்பார்கள்.

அதைப் போலவே, நமது சகோதரர் அவர்கள் ஆவிக்குரிய காரியத்தில் அதிக தாகம் உள்ளவராக இருந்தார். அவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அந்த ஆரம்ப நாட்களில், "வேதாகமத்திலுள்ள சத்தியங்களைக் குறித்து நமக்கு ஏதாவது சொல்ல மாட்டார்களா?" என்றும், "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரைக் குறித்த விளக்கங்களை நமக்குச் சொல்லிக் கொடுக்க மாட்டார்களா?" என்றும், "மனிதர்களுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தைக் குறித்த அனேக விளக்கங்களை அறிந்து கொள்ள வேண்டும்." என்றும், அவர் அதிக ஆர்வம் உள்ளவராக இருந்தார்.

நான் கம்பெனியில் வேலையை முடித்து விட்டு, மாலை வேளையில் என் வீட்டிற்கு வரும் போதெல்லாம், என்னிடத்தில் அனேகக் கேள்விகளைக் கேட்டு, வேதாகம சத்தியங்களை இன்னும் அறிந்து கொள்ள வேண்டும் என்று, எங்கள் வீட்டில் வந்து உட்கார்ந்திருப்பார். அந்த நாட்களில், ஆவிக்குரிய வாழ்க்கையில் நான் அந்த அளவிற்குப் பெரிய ஆளும் கிடையாது. நானும் அப்பொழுதுதான், கிறிஸ்துவுக்குள் வளர்ந்து வந்து கொண்டிருக்கக் கூடிய பருவத்தில் இருந்தேன்.

ஆனாலும், 'என்னுடைய நண்பர்!' என்கிற முறையில், நமது சகோதரர் அவர்கள் அனேகக் கேள்விகளை என்னிடத்தில் கேட்பார். நான் அதற்கெல்லாம் பதில் சொல்வேன். எனக்குத் தெரியாத அவருடைய கேள்விகளுக்கான பதில்களை, எங்கள் ஆலயத்தின் டீக்கன் அவர்களிடத்தில் போய் கேட்டு தெரிந்து கொள்வோம். இப்படிப்பட்டதான ஆவிக்குரிய பல விஷயங்களுக்காக பல மணி நேரங்களை நாங்கள் செலவு செய்து இருக்கிறோம். அதன் பிறகு, எப்பொழுது எல்லாம் நேரம் கிடைக்கிறதோ, எந்தக் கிழமை என்றாலும் சரி, அப்பொழுதெல்லாம் ஜெபம் செய்வதற்காக ஆலயத்திற்குப் போய் விடுவோம்.

அந்த நாட்களில், நமது சகோதரர் அவர்கள் ஜனங்களுக்காக ஜெபிக்கும்போது, அவர்களுக்கு சுகம் கிடைத்ததை நான் பார்த்திருக்கிறேன். நமது சகோதரர் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமான ஆத்தும தாகம் உள்ளவர்களாக இருந்தார்கள். பரிசுத்த வேதாகமத்திலிருந்து, ஒவ்வொரு வேத வார்த்தைகளைப் பற்றியும் நான் அவர்களுக்கு எடுத்துச் சொல்வேன்.

அது மட்டுமல்ல, அங்கு நடைபெறுகிற எல்லா ஆவிக்குரிய கூட்டங்களுக்கும் நாங்கள் செல்வோம். ஈஸ்டர் காலங்களில் திருச்சபைகளில் நடத்தப்படுகிற நாடகங்களில், நமது சகோதரர் அவர்கள் இயேசு கிறிஸ்து வேடத்தில் நடித்தும் இருக்கிறார்கள்! அவர்கள், "நான் ஊழியம் செய்யப் போகிறேன்." என்று என்னிடத்தில் சொன்னபோது கூட, நான் அவரிடத்தில், "எதற்கும் அவசரப்படாமல் முடிவு எடுங்கள். நான் ஒரு கம்பெனியில் வேல்லை செய்கிறேன். சகோ. டி.ஜி.எஸ். **தினகரன்** அவர்களைப் பாருங்கள், அவர்கள் ஒரு வங்கியில் வேலை பார்த்துக் கொண்டேதான் ஊழியம் செய்து வருகிறார்கள். கர்த்தருடைய உண்மையான அழைப்பாக இருந்தால் மட்டுமே ஊழியம் செய்ய முடியும்." என்று சொன்னேன்.

அப்படியானால், "நான் படிக்கப் போகிறேன்." என்று சொல்லி விட்டு, படிப்பதற்காக மதுரைக்குக் கடந்து சென்றார்கள். ஆனால் என் உள்ளத்திற்குள், "நான் அவரைப் பின்னால் இழுக்கிறேனோ?" என்கிற ஒரு எண்ணம் உண்டானது. அதன் பிறகு, சென்னையில் உள்ள ஒரு கம்பெனியில் வேலை பார்த்தார்கள். அதுவும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. நான் சகோதரர் அவர்களோடு நட்பு வைத்திருந்ததினாலும், அடிக்கடி அவர் என்னிடத்தில் அனேக ஆவிக்குரிய கேள்விகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டதினாலும், 'நானும் அனேக ஆவிக்குரிய காரியங்களைக் கற்றுக் கொண்டேன்.' என்றுதான் சொல்ல வேண்டும்.

**"சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள், இன்றைக்கு இந்த தேசத்திற்கு இவ்வளவு ஆசீர்வாதமாக இருப்பார்கள்!" என்று, அந்த நாட்களில் நீங்கள் நினைத்தீர்களா?**

நமது சகோதரர் அவர்களுடைய தாயார் என்னிடத்தில், "மனாசே, இவன் பெரிய ஒரு டாக்டராக வர வேண்டும்!" என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் இவன், 'நான் ஒரு ஊழியக்காரனாகப் போகிறேன்!' என்று சொல்கிறானே!" என்று சொன்னார்கள். அதற்கு நான் அவர்களிடத்தில், "உங்கள் மகன் பெரிய ஒரு ஊழியக்காரனாக மாறி விட்டால், எத்தனையோ இஞ்சினீயர்களுக்கும், டாக்டர்களுக்கும் ஆலோசனை கொடுக்கவும், இந்த தேசத்திற்கே ஆசீர்வாதமாக இருக்கவும் தக்கதான ஒரு உயர்ந்த நிலைக்கு கர்த்தர் அவரை உயர்த்தி, ஆசீர்வாதமாக வைப்பார்!" என்று சொன்னேன். காரணம், அவர்களுடைய உள்ளத்திற்குள் இருந்த ஆத்தும தாகத்தையும், ஊழிய வாஞ்சையையும், அன்றைக்கே என்னால் பார்க்க முடிந்தது!

**சகோ. மனாசே குணசேகரன் அவர்களோடு தனக்கிருந்த நட்பைப் பற்றி நமது சகோதரர் அவர்கள் சொல்லும்போது...**

**சகோ. மனாசே குணசேகரன்** அவர்கள், ஒரு கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். நான் என்னை ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்திருந்தேன். தினமும் மாலை நேரத்தில் நாங்கள் இருவரும் தவறாமல் சந்தித்து விடுவோம். ஒருநாள் கூட எங்களால் சந்திக்காமல் இருக்க முடியாது.

அப்படியாக சந்தித்துக் கொள்கிற வேளைகளில் எல்லாம், இயேசு கிறிஸ்துவைப் பற்றித்தான் அதிகமாகப் பேசுவோம். அது மட்டுமல்ல, '**பிச்சைமுத்து**', '**தங்கராஜ்**' என்கிற 2 நண்பர்களும் எங்களுக்கு இருந்தார்கள். நாங்கள் 4 பேரும், திருச்சபை ஊழியம் சம்மந்தமாக எங்கள் திருச்சபைப் போதகரோடு சேர்ந்து ஜெபம் பண்ணுவது, வேத பாட வகுப்புகள் நடத்துவதற்காக போதகர் அவர்கள் எங்கு போனாலும், நாங்களும் அவர்களோடு சேர்ந்து போவது போன்ற ஆவிக்குரிய எல்லாக் காரியங்களிலும் மிகுந்த தாகத்தோடு பங்கு பெற்றோம்.

நாங்கள் 4 பேரும் அடிக்கடி சந்தித்துக் கொள்வோம். அப்படிப்பட்டதான ஒரு ஐக்கியத்தை கர்த்தர் எங்களுக்குக் கொடுத்திருந்தார். அதிலும், "ஒரு விசேஷமான காரியம் என்ன?" என்றால், "உங்களுக்கு 'லாசரஸ்' என்று பெயர் வைத்தது யார்?" என்று சிலர் கேட்பார்கள்.

சகோ. மனாசே குணசேகரன் அவர்கள்தான் எனக்கு 'லாசரஸ்' என்கிற பெயரை வைத்தார்கள். நான் ஆலயங்களுக்குப் போகிற சமயங்களில் சிலர் என்னிடத்தில், "கிறிஸ்தவப் பெயர் வைக்க வேண்டும்." என்று சொன்னபோது, "எனக்கு கிறிஸ்தவப் பெயர் எல்லாம் தெரியாது. சகோ. மனாசே குணசேகரன் அவர்களைத்தான் எனக்குத் தெரியும்." என்று சொல்வேன். ஆகவே, அவர்களிடத்தில் வந்துதான் கேட்டேன். உடனே அவர்களும் எனக்கு, "லாசரஸ்' என வைப்போம்." என்று சொல்லி, எனக்குப் பெயர் வைத்தார்கள்.

**சகோ. மனாசே குணசேகரன் அவர்களிடத்தில், "இந்தப் பெயர்தான் வைக்க வேண்டும்." என்று சொல்லி, எப்படி உங்களுக்கு ஒரு எண்ணம் வந்தது?" என்று கேட்டபோது...**

அந்த நாட்களில், மாலை வேளையில் நான் எங்கள் திருச்சபை விசுவாசிகள் எல்லோருடைய வீட்டிற்கும் ஜெபிக்கப் போவேன். அப்பொழுது நமது சகோதரர் அவர்களை நான் பார்த்திருக்கிறேன். நமது சகோதரர் அவர்களுடைய பக்கத்து வீட்டில் குடியிருந்தவர்கள், எங்கள் திருச்சபையைச் சேர்ந்தவர்கள். அந்த வீட்டில் இருந்த ஒரு சகோதரனும், இவரும் ஒரே வயதுடையவர்களாக இருந்தார்கள். ஆகவே, இரண்டு பேரும் எனக்கு நண்பர்களாகி விட்டார்கள்.

அப்பொழுது, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் திருச்சபையில் சேர வேண்டும். அதற்காக நமது சகோதரர் அவர்களுக்கு "என்ன பெயர் வைப்பது?" என்று நான் யோசித்துக் கொண்டிருந்தபோது, நமது சகோதரர் அவர்கள் வியாதிப் படுக்கையில் கிடந்த சம்பவம் என் நினைவுக்கு வந்தது.

நானும் அவர்களுடைய வீட்டிற்கு ஜெபிக்கச் சென்றிருக்கிறேன். நான் அவரிடத்தில், "செத்துப் போனவனை இயேசு கிறிஸ்து உயிரோடு எழுப்பினார்.

**– தொடரும்...**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அமெரிக்கா மற்றும் கனடா தேசத்தில்

# ஜெப எழுப்புதல்!



## அமெரிக்காவில் 1999 முதல், நடைபெற்று வரும் திறப்பின் வாசல் ஜெபத்திற்கு, கர்த்தர் கொடுத்திருக்கும் பதில்!

கடந்த 1998ம் ஆண்டு, நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், அமெரிக்கா தேச ஊழியங்களுக்காக வந்திருந்தபோது, வாஷிங்டன் தமிழ் சபையின் போதகராக இருந்த **Rev. பிரபுதாஸ் ராபர்ட்ஸ்** அவர்கள், "அமெரிக்கா தேசத்திற்கு ஜெபம் தேவை. இந்தியாவில் நீங்கள் உபவாச ஜெபம் நடத்துவதுபோல, அமெரிக்காவிலும் உபவாச ஜெபம் நடத்த முடியுமா?" என்று கேட்டுக் கொண்டபடியினால், அதற்காக ஜெபித்து, ஆவியானவரின் வழி நடத்துதலின்படி, 1999 ஜூலை மாதம், முதன் முதலாக 2 நாட்கள் உபவாச ஜெபம் நடத்தப்பட்டது. அந்த ஜெபத்தில், சுமார் 20 பேர் பங்கு பெற்று ஜெபித்தார்கள்.



Rev. பிரபுதாஸ் ராபர்ட்ஸ்

அதன் பின், 3 நாட்கள் உபவாச ஜெபமாக்கப்பட்டது. ஜெபிக்கிற மக்களை கர்த்தர் கூட்டிச் சேர்த்தார். இந்த 2017ம் வருடம் 18வது வருடமாக, 3 நாட்கள் உபவாச ஜெபம் நடத்த, கர்த்தர் உதவி செய்தார். இந்த ஜெபத்தில், 14 மாநிலங்களிலிருந்து சுமார் 600க்கும் அதிகமான தேவ பிள்ளைகள் கூடி வந்து ஜெபித்தார்கள். அன்பு சகோதரர் **டேவிட் ஸ்டூவர்ட், Jr.**, அவர்களும், **நமது சகோதரர்** அவர்களும் இணைந்து, தேவ செய்தி கொடுத்து, ஜெபங்களை நடத்தினார்கள்.

அதே விதமாக, கடந்த 2001ம் ஆண்டுமுதல், 16 ஆண்டுகளாக கலிபோர்னியா மாநிலத்தில், **சான்பிரான்சிஸ்கோ, லாஸ் ஏஞ்சலஸ்** போன்ற பட்டணங்களிலும் திறப்பின் வாசல் உபவாச ஜெபம் நடத்தி, அமெரிக்கா தேசத்திற்காக ஜெபித்தார்கள். "அமெரிக்காவில் ஒரு ஜெப எழுப்புதல் உண்டாகும்! வாலிபர்கள் மீது ஆவியானவர் ஊற்றப்படுவார்! தேசத்தில் ஆதி மகிமை திரும்பி வரும்!' என்று ஆவியானவர் இந்த ஜெபங்களில் வெளிப்படுத்தினார். அவர் சொன்னபடியே, இன்று அமெரிக்கா தேசம் முழுவதும் ஒரு ஜெப எழுப்புதல் பரவி வருகிறதை நாங்கள் பார்க்கிறோம்.

இந்த 2017ம் ஆண்டு, **வாஷிங்டன் D.C**யிலும் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள **டாலஸ்** பட்டணத்திலும், கலிபோர்னியா மாநிலம்-**சான் பிரான்சிஸ்கோ** பட்டணத்திலும் நடைபெற்ற உபவாச ஜெபங்களில், சுமார் 1,000க்கும் அதிகமான தேவ பிள்ளைகள் கூடி வந்து ஜெபித்தார்கள்.

கடந்த 2015ம் ஆண்டு நடைபெற்ற உபவாச ஜெபத்தில், வரப் போகிற ஜனாதிபதி தேர்தலுக்காக ஜெபித்தபோது, "தாவீதைப்போல என் விருப்பத்தை நிறைவேற்றுகிற ஒரு ஜனாதிபதியை தருவேன்." என்று கர்த்தர் வெளிப்படுத்தி, அதற்காக ஜெபிக்க வைத்தார். தான் சொன்னபடியே, சோதோம் கொமோரா பாவத்தையும், கருச் சிதைவையும் **(Abortion)** வெளிப்படையாக எதிர்க்கிற ஒரு ஜனாதிபதியை கர்த்தர் தந்திருக்கிறார்!

வாஷிங்டன் D.Cயில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் கூடி வந்திருந்த தேவ பிள்ளைகள், கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்க ஜனாதிபதி மாளிகை **(White House)** மற்றும் அமெரிக்கப் பாராளுமன்றக் கட்டிடத்திற்கு **(Capital Building)** முன்பாகக் கூடி நின்று ஜெபித்தார்கள். அப்பொழுதே ஜெபிக்க வந்த சில தேவ பிள்ளைகளுக்கு, வெள்ளை மாளிகையில் வரப் போகிற சுத்திகரிப்பைக் குறித்து கர்த்தர் வெளிப்படுத்தினார். கர்த்தர் சொன்னபடியே, இந்த ஜனாதிபதி வந்ததும், ஜனாதிபதி மாளிகையில் இருந்த சில மத வணக்க அடையாளங்கள் எல்லாம் வெள்ளை மாளிகையை விட்டு அப்புறப் படுத்தப்பட்டது! இன்று, வெள்ளை மாளிகையில் ஜெபங்கள் நடத்தப்படுகிறது.

இந்த 18 வருட ஜெபங்களின் விளைவாக, அமெரிக்காவில் ஒரு ஜெப எழுப்புதல் உண்டாகி இருக்கிறதைக் காண முடிகிறது! விசுவாசிகளுடைய வாழ்க்கையில் ஒரு பெரிய ஆவிக்குரிய மாற்றம் உண்டாகி இருக்கிறது!

இப்போது பொது இடங்களில் விசுவாசிகள் திரளாகக் கூடி ஜெபிக்கிற, ஜெபக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது.

ஜெபத்திற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த பள்ளிக் கூடங்களில், சில மாநிலங்களில் **(Missouri, Mississippi, Florida)** மறுபடியும் ஜெபிக்க அனுமதிக்கப் பட்டிருக்கிறது.

**International House of Prayer (Sep., 1999), The Call (2000), Hollywood Prayer Network (2001), Justice House of Prayer (2004), Azusa Now (2016)** போன்ற புதிதாக அனேக ஜெப ஊழியங்கள் எழும்பியிருக்கிறது!

அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில், கர்த்தருக்குப் பயந்து நடக்கிற நீதிபதிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்! கர்த்தருடைய பிள்ளைகள் **Senator**களாக வெற்றி பெற்று, அரசியலில் மாற்றம் வந்திருக்கிறது!

கடந்த பல ஆண்டுகளாக, **"Merry Christmas!"** என்று சொல்லக் கூடாது. **'Happy Holiday!'** என்றுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல வேண்டும்." என்கிற நிலை அமெரிக்காவில் இருந்தது. இன்று 'Merry Christmas!' என்று தைரியமாக சொல்லக் கூடிய மாற்றம் வந்திருக்கிறது!

கடந்த ஆட்சியில் கிறிஸ்தவ சபைகள், கிறிஸ்தவ ஊழியங்களுக்குக் கொடுக்கப்பட்ட நெருக்கங்கள் மாறி, இன்று விடுதலையோடு தேவ செய்திகளை அறிவிக்கிற சூழ்நிலைகள் உண்டாகி இருக்கிறது!

அமெரிக்காவில், சந்திக்கப்படாத மக்களுக்கு சுவிசேஷத்தை தைரியமாக அறிவிக்க, பல ஊழியங்கள் இப்போது எழும்பி இருக்கிறது! வருகிற 2025க்குள், உலகின் எல்லா மொழிகளிலும் பரிசுத்த வேதாகமத்தை மொழி பெயர்க்கிற வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டது!

சில வருடங்களாக கலிபோர்னியா, டெக்சாஸ் போன்ற மாநிலங்களில், மழையில்லாமல் உண்டான வறட்சி நீங்கி, இந்த வருடம் செழிப்பு உண்டாகி இருக்கிறது!

இன்று வெள்ளை மாளிகையிலும், பாராளுமன்றக் கட்டிடத்திலும் (Capitol) ஜெபங்களும், Bible studyயும் கிரமமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக, துண்டிக்கப்பட்டிருந்த இஸ்ரேல் தேசத்துடனான உறவு புதுப்பிக்கப்பட்டு, அமெரிக்க ஜனாதிபதி இஸ்ரேல் தேசத்தில் உள்ள பரிசுத்த பூமியை சுற்றிப் பார்த்து வந்திருக்கிறார்.

இப்படிப்பட்ட நல்ல மாற்றங்கள் உண்டாகக் காரணம், ஜெபம்! ஜெபம்! ஜெபம்! இன்று, அமெரிக்கக் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு ஜெப விழிப்புணர்வு வந்திருக்கிறதைப் பார்க்க முடிகிறது. கடந்த 18 வருடங்களாக என்னென்ன காரியங்களுக்காக உபவாச ஜெபத்தில் ஜெபித்தோமோ, இன்று அதையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றி வருகிறதைக் காண முடிகிறது.

ஜெப நேரத்தில் ஆவியானவர் எவைகளை எல்லாம் வெளிப்படுத்தினாரோ, அவைகள் எல்லாம் தேசத்தில் நிறைவேறி வருகிறதைப் பார்க்கும்போது, கர்த்தரைத் துதிக்கிறோம். ஒரு வருடம் கூட தடைபடாதபடி, கடந்த 18 ஆண்டுகளாக இந்த திறப்பின் வாசல் ஜெபத்தை நடத்தித் தந்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

ஆவியானவரின் வழி நடத்துதலின்படி, "தேசத்திற்காக எப்படியெல்லாம் ஜெபிக்க வேண்டும்." என்று, எங்களுக்குக் கற்றுக் கொடுத்து, எங்களை ஜெபத்திலே வழி நடத்திய, நமது அன்பு சகோதரர் **மோகன் சி. லாசரஸ் அவர்களுக்கும், 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திற்கும்** அமெரிக்க மக்கள் சார்பாக நன்றி கூறுகிறோம்.

## அமெரிக்கா - வாஷிங்டன் DCயில், 18வது திறப்பின் வாசல் உபவாச ஜெபம்!

கடந்த (2017) ஜுன் 29, 30 மற்றும் ஜுலை 1 ஆகிய தேதிகளில், **வாஷிங்டன் DC-** Word of Life International Churchல் வைத்து, **18வது திறப்பின் வாசல் உபவாச ஜெபம்** (3 நாட்கள்) நடைபெற்றது. இந்த ஜெபத்தில் அங்குள்ள **17 மாநிலங்களில்** இருந்து மட்டுமல்லாது, **இந்தியா, இலங்கை** போன்ற தேசங்களிலிருந்தும், சுமார் **600க்கும்** அதிகமான தேவ பிள்ளைகள் மற்றும் அனேக திருச்சபைப் போதகர்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபித்தார்கள்.

நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்களும், **Rev. டேவிட் ஸ்டூவர்ட், Jr.,** அவர்களும் தேவ செய்தி அளித்து, தேசத்திற்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். சகோ. **சுரேஷ் பாபு,** சகோ. **சதீஷ் ஆர்தர்** மற்றும் சகோ. **பிரபாகர்** ஆகியோர் அமெரிக்கா தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், எழுப்புதலுக்காகவும் ஜெபத்தை ஏறெடுத்தார்கள்.

ஜுலை 30ம் தேதி மாலை White House மற்றும் Capitol பகுதிகளுக்கு, 4 பேருந்துகளில் தேவ பிள்ளைகள் கடந்து சென்று, **ஜெப நடை** செய்து, தேசத்திற்காக பாரத்தோடு ஜெபித்தனர்.

மன்றாட்டு ஜெப வேளையில், தேசத்தில் நடக்கப் போகிற அனேகக் காரியங்களை கர்த்தர் வெளிப்படுத்தினார்.

இந்த உபவாச ஜெபத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் Indian Prayer Fellowshipல் உள்ள தேவ பிள்ளைகள் மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.



Rev. டேவிட் ஸ்டூவர்ட், Jr.,







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகாகோவில், அற்புதத்தின் இரவு ஜெபம்!

ஜூலை 5ம் தேதி இரவு, **சிகாகோ-St. Thomas Mar Thoma Church**ல் வைத்து, தேசத்தில் கட்டுண்டவர்களை விடுதலையாக்கும்படியாக, **அற்புதத்தின் இரவு ஜெபம்** நடைபெற்றது. நமது சகோதரர் அவர்கள், **"கர்த்தரிடத்திலிருந்து அற்புதங்களைப் பெற்றுக் கொள்வது எப்படி?"** என்பதைப் பற்றி தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டு, வந்திருந்த தேவ பிள்ளைகளின் வாழ்க்கையில் கர்த்தர் அற்புதம் செய்யும்படியாக சிறப்பு ஜெபத்தை ஏறெடுத்தார்கள். வந்திருந்த ஒவ்வொருவரும் கண்ணீரோடு தங்களை கர்த்தருக்காக அர்ப்பணித்தார்கள். விடுதலையைப் பெற்றுக் கொண்டவர்களில் அனேகர் சாட்சி கூறி, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். இந்த இரவு ஜெபத்தை, சகோ. Issac Robinson அவர்கள் ஒழுங்கு செய்து நடத்தினார்கள்.

## டெக்சாஸில், திறப்பின் வாசல் உபவாச ஜெபம்!

ஜூலை 20,21,22 தேதிகளில், தேசத்தின் எழுப்புதலுக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிக்கும்படியாக, **டெக்சாஸ்-Life Fellowship Church**ல் வைத்து, (3 நாட்கள்) **திறப்பின் வாசல் உபவாச ஜெபம்** நடைபெற்றது. சுமார் **300**க்கும் அதிகமான தேவ பிள்ளைகள் ஜெபிக்கக் கூடி வந்திருந்தனர். பாடல்-ஆராதனை வேளைகளை Pr. **கிதியோன் குழு**வினர் நடத்தினார்கள்.

**நமது சகோதரர்** அவர்கள் தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டு ஜெபித்தபோது, கலந்து கொண்ட ஒவ்வொருவரும் மிகுந்த கண்ணீரோடு ஜெபித்தனர். மன்றாட்டு ஜெப வேளையில், தேசத்தைக் குறித்ததான பல வெளிப்பாடுகளை ஆவியானவர் கொடுத்தார்.

சகோ. **சுரேஷ் பாபு**, சகோ. **பிரபாகர் தேவராஜ்**, சகோ. **அலெக்ஸ்**, சகோ. R. **ஜோசப் மனோகரன்** மற்றும் Pr. **கிரிஸ் லிண்ட்பெர்க்** ஆகியோர் தேசத்திலுள்ள திருச்சபைகள், குடும்பங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தொழில்துறைகள் மற்றும் ஊடகத்துறையில் எழுப்புதல் உண்டாக மிகுந்த பாரத்தோடு ஜெபத்தை ஏறெடுத்தார்கள். இந்த உபவாச ஜெபம் முழுவதையும் சகோ. **பிரபாகர்** மற்றும் டெக்ஸாசில் உள்ள பல தேவ பிள்ளைகள் இணைந்து நடத்தினார்கள்.

## சான்பிரான்சிஸ்கோவில், 12 மணி நேர உபவாச ஜெபம்!

ஜூலை 29 அன்று, **சான்பிரான்சிஸ்கோ** Bay Area-கலிபோர்னியாவில் உள்ள Harbor Light Churchல் வைத்து, **12 மணி நேர உபவாச ஜெபம்** நடைபெற்றது. இந்த ஜெபத்திற்கு சுமார் **400**க்கும் அதிகமான தேவ பிள்ளைகள், தேசத்தின் எழுப்புதலுக்கு விரோதமாகப் போராடுகிற பிசாசின் கிரியைகளைக் கட்டி ஜெபிக்கும்படியாகக் கூடி வந்திருந்தனர்.

சகோதரி **ரமோலா மலர்**, Bishop George Chigwada, சகோ. R. **ஜோசப் மனோகரன்**, சகோ. **ஜெபராஜ் தனராஜ்** மற்றும் Pr. Tim Inman ஆகியோர், தேசத்திலுள்ள குழந்தைகள் பாதுகாக்கப்படவும், அதிகாரத்தில் உள்ளவர்களுக்காகவும், சுவிசேஷகர்களுக்காகவும், குடும்பங்கள் மற்றும் திருச்சபைகளுக்காகவும் ஜெபத்தை ஏறெடுத்தார்கள்.

**நமது சகோதரர்** அவர்கள், பிசாசுகளை எதிர்த்து யுத்த ஜெபத்தையும், தேசத்தின் ஜனங்களுக்காக மன்றாட்டு ஜெபத்தையும் ஏறெடுத்தார்கள். ஜெப வேளையில் ஆவியானவர் அனேக வெளிப்பாடுகளைக் கொடுத்தார். நமது சகோதரர் அவர்கள் தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டு, ஜெபிக்க வந்திருந்த தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காகவும், விடுதலைக்காகவும் ஜெபித்தார்கள்.



## சியாட்டலில், அற்புதத்தின் இரவு ஜெபம்!

ஜூலை 30ம் தேதியன்று, 'சியாட்டல்'-Redmond High School - Art Centre Auditorium-ல் வைத்து, **அற்புதத்தின் இரவு ஜெபம்** நடைபெற்றது. செய்தி வேளையில் **நமது சகோதரர்** அவர்கள், கர்த்தரிடத்தில் இருந்து அற்புதத்தைப் பெற்றுக் கொள்வதைப் பற்றி தேவ செய்தி அளித்து, அந்த இரவு ஜெபத்தில் கலந்து கொண்டவர்களின் அற்புத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகத்திற்காக ஜெபித்தபோது, அனேகர் விடுதலை பெற்று, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். இந்த ஜெபத்திற்கான சகல ஏற்பாடுகளையும் சகோ. **சுரேஷ் பாபு** மற்றும் Redmond tamil Churchம் இணைந்து நடத்தினார்கள்.

அமெரிக்காவில் நடைபெற்ற அனைத்துக் கூட்டங்களிலும் நமது சகோதரர் அவர்கள் அளித்த தேவ செய்திகள் மற்றும் ஜெபங்களை, சகோ. **சுரேஷ் பாபு** அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உதவினார்கள்.

## ஃபுளோரிடா-டாம்பாவில், ஆசீர்வாதப் பெருவிழா!

ஆகஸ்ட் 5, 6 தேதிகளில், ஃபுளோரிடா மாகாணம்-டாம்பா-David Barksdale Senior Centreல் வைத்து, **ஆசீர்வாதப் பெருவிழா** நடைபெற்றது. இதில், சுமார் **100**க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

இரண்டு நாட்களும், **நமது சகோதரர்** அவர்கள் தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டு, தேசத்திற்காகவும், கலந்து கொண்ட தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபித்தபோது, கர்த்தர் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்தார். அற்புதங்களைப் பெற்றவர்களில் அனேகர் சாட்சி கூறி, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். இந்த ஆசீர்வாதப் பெருவிழாவை, சகோ. Ivan மற்றும் Tampa Bay Tamil Churchம் இணைந்து நடத்தினார்கள்.

## அமெரிக்காவில் 'இயேசு விடுவிக்கிறார்' கிளை அலுவலகங்கள்!

**வாஷிங்டன் DC**

சகோ. **ராஜேஸ் ஜாண்,**
Ph: (240) 481 5268).







**சான் பிரான்சிஸ்கோ**

சகோ. R. **ஜோசப் மனோகரன்,**
Ph: (408) 316 5762.

சகோ. **கிறிஸ்டின் மலர்,**
Ph: 510 676 3329.



நம் 'இயேசு விடுவிக்கிறார்' வெளியீடுகளான ஆவிக்குரிய புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் பாடல்கள், தேவ செய்திகள் அடங்கிய CDக்கள் இங்கே பெற்றுக் கொள்ளலாம். அமெரிக்காவில் நம் 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்களுக்குக் காணிக்கை அனுப்ப விரும்புகிறவர்கள், இவர்களோடு தொடர்பு கொள்ளலாம்.

## கனடா-மான்ட்ரியாலில்

### திருச்சபை போதகர்கள் மற்றும் சபை தலைவர்களுக்கான சிறப்பு ஜெபக் கூடுகை!

ஜுலை 7ம் தேதியன்று, **மாண்ட்ரியால்-Church of God** (Eglise De Dieu D'outremont)ல் வைத்து, **திருச்சபை போதகர்கள் மற்றும் சபை தலைவர்களுக்கான சிறப்பு ஜெபக் கூடுகை** நடத்தப்பட்டது. இதில் **நமது சகோதரர்** அவர்கள், தேசத்தின் எழுப்புதலுக்காக கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற அனேகக் காரியங்களைப் பற்றிப் பகிர்ந்து கொண்டு, கனடா தேசத்தை கர்த்தருடைய கரத்தில் அர்ப்பணித்து ஜெபித்தார்கள்.

## 12 மணி நேர திறப்பின் வாசல் உபவாச ஜெபம்!

மறுநாள் ஜுலை 8ம் தேதி, **மாண்ட்ரியால்-Church of God** (Eglise De Dieu D'outremont)ல் வைத்து, கனடா தேசத்தின் எழுப்புதலுக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிக்கும்படியாக, **12 மணி நேர திறப்பின் வாசல் உபவாச ஜெபம்** நடைபெற்றது. இதில் சபைப் பாகுபாடின்றி, அனேக தமிழ் திருச்சபையினரும் கலந்து கொண்டு ஜெபித்தார்கள்.

**Pr. ஜாண் பாலக்குமார்** அவர்கள், கனடா தேசத்திலுள்ள திருச்சபைகளில் எழுப்புதல் உண்டாகவும், இலங்கை தேசத்திற்காகவும் ஜெபித்தார்கள்.

நமது சகோதரர் அவர்கள், கர்த்தர் கொடுத்த வார்த்தைகளை தேவ செய்தியாகப் பகிர்ந்து கொண்டு ஜெபித்தார்கள்.

அனேகர் தங்கள் பாவத்தை அறிக்கையிட்டு, கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணித்தார்கள். மன்றாட்டு ஜெப வேளையில், கர்த்தர் தேசத்தைக் குறித்ததான அனேக வெளிப்பாடுகளைக் கொடுத்தார். சகோ. **ஆபிரகாம் செல்வராஜ்** அவர்கள் வாலிபர்களுக்காக சிறப்பு ஜெபம் செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அற்புத சுகமளிக்கும் ஆராதனை!

ஜூலை 9ம் தேதியன்று, மான்ட்ரியால்-Church of Godல் வைத்து, **அற்புத சுகமளிக்கும் ஆராதனை** நடைபெற்றது. இந்த ஆராதனையின் மூலமாக, கர்த்தரிடத்தில் இருந்து அற்புதத்தையும், விடுதலையையும் பெற்றுக் கொள்ளும்படியாக அனேக தேவ பிள்ளைகளும், திருச்சபைப் போதகர்களும் கலந்து கொண்டனர்.

நமது சகோதரர் அவர்கள், **"எதிர்பார்க்கும் காரியத்தில் அற்புதம்!"** என்கிற தலைப்பில், கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டு ஜெபித்தார்கள். ஜெப வேளையில், ஆவியானவர் அனேகரைத் தொட்டு விடுதலையாக்கினார். விடுதலையைப் பெற்றுக் கொண்டவர்களில் சிலர் சாட்சி கூறி கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

மான்ட்ரியாவில் நடைபெற்ற அனைத்து ஜெபங்களையும், அங்குள்ள அனைத்து தமிழ் திருச்சபை போதகர்கள் ஒழுங்கு செய்து நடத்தினார்கள்.

## டொரோண்டோவில்,

## 12 மணி நேர திறப்பின் வாசல் உபவாச ஜெபம்!



ஜூலை 15ம் தேதியன்று, டொரோண்டோ-Canada Christian Collegeல் வைத்து, **12 மணி நேர திறப்பின் வாசல் உபவாச ஜெபம்** நடைபெற்றது. சுமார் **400**க்கும் அதிகமான தேவ பிள்ளைகள் திறப்பிலே நின்று, தேசத்திற்காக ஜெபிக்கக் கூடி வந்திருந்தனர்.

திருச்சபைகளில் எழுப்புதல் உண்டாகவும், இலங்கை தேசத்திற்காகவும், Pr. **ஜாண் பாலக்குமார்** அவர்கள் ஜெபம் செய்தார்கள். தொடர்ந்து நடைபெற்ற மன்றாட்டு ஜெப வேளையில், ஆவியானவர் நமது சகோதரர் அவர்கள் மூலமாக, தேசத்தைக் குறித்ததான அனேக வெளிப்பாடுகளைக் கொடுத்தார்.

கடைசியாக, **நமது சகோதரர்** மற்றும் சகோ. R. **ஜோசப் மனோகரன்** அவர்கள், கர்த்தர் கொடுத்த வார்த்தைகளை தேவ செய்திகளாகப் பகிர்ந்து கொண்டு, தேசத்தின் எழுப்புதலுக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபித்தார்கள்.

## அற்புத சுகமளிக்கும் ஆராதனை!

ஜூலை 16ம் தேதியன்று, டொரோண்டோ-Canada Christian Collegeல் வைத்து, **அற்புத சுகமளிக்கும் ஆராதனை** நடைபெற்றது. ஜெப வேளையில் அற்புத சுகத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டவர்களில் அனேகர் சாட்சி கூறி, தேவ நாமத்தை மகிமைப்படுத்தினார்கள்.

கனடா தேசத்தில் நடைபெற்ற அனைத்து ஊழியங்களையும், Pr. **ஜாண் பாலக்குமார்** அவர்கள் பொறுப்பேற்று சிறப்பாக நடத்தினார்கள்.

**தொடர்ந்து, அமெரிக்கா மற்றும் கனடா தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபியுங்கள்.**

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! - ஒருங்கிணைப்பாளர்.

## கனடாவில் 'இயேசு விடுவிக்கிறார்' கிளை அலுவலகம்!

**Jesus Redeems Ministries Inc.,**
PO Box. 43039, Mississauga,
ON L5B 4X0.
**prayers@jesusredeems.ca**

சகோ. ஆபிரகாம் செல்வராஜ்
**Ph: +1 (416) 806-2410.**



நம் 'இயேசு விடுவிக்கிறார்' வெளியீடுகளான ஆவிக்குரிய புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் பாடல்கள், தேவ செய்திகள் அடங்கிய CDக்கள் இங்கே பெற்றுக் கொள்ளலாம். கனடாவில் நம் 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்களுக்குக் காணிக்கை அனுப்ப விரும்புகிறவர்கள், இந்த சகோதரரோடு தொடர்பு கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்;" நீதி. 19:17.

# புது வாழ்வு பல்நோக்கு மருத்துவமனை!

## *(New Life Multi Speciality Hospital)*




**ஒரு சதுர அடிக்கு ₹ 2,200/- செலவாகும்.**
(மொத்த அளவு 28,000 சதுர அடி)

'இயேசு விடுவிக்கிறார்' புது வாழ்வு சங்கம்–சமூக சேவைப் பிரிவு.

**க**ர்த்தருடைய கிருபையினாலும், உங்களுடைய ஜெபத்தினாலும், உதாரத்துவமான நன்கொடைகளினாலும், நமது **புது வாழ்வு பல்நோக்கு மருத்துவமனையின்** கட்டுமானப் பணிகள் தடையில்லாமல் நடைபெற்று வருகிறது.

அஸ்திபாரப் பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது **காங்கிரீட் தூண்கள்** அமைக்கிற பணிகள் நடைபெற்று வருகிறது. இப்போதும், தற்காலிகமாக நடைபெற்று வருகிற நமது இலவச மருத்துவமனை ஊழியத்தின் மூலமாக, அனேக ஏழை–எளிய மக்கள் பயன்பெற்று வருவது மட்டுமல்லாமல், இயேசு கிறிஸ்துவின் அன்பையும் அறிந்து வருகிறார்கள்.

வெகு சீக்கிரத்தில் இந்த மருத்துவமனை கட்டி முடிக்கப்பட வேண்டும். இதற்காக **ஜெபியுங்கள்.** கர்த்தருடைய இந்த உன்னதமான பணிக்காக, ஏவப்படுகிறபடி **கொடுத்துத் தாங்க உங்களை அன்போடு அழைக்கிறேன்.**

மட்டுமல்ல, "மொத்தம் 216 அறைகள் கட்டப்பட வேண்டும்." என்று தெரியப்படுத்தி இருந்த காரியத்தில், தற்போது **12 அறைகளைக் கட்டிக் கொடுப்பதற்காக, சில தேவ பிள்ளைகளை கர்த்தர் எழுப்பி இருக்கிறார்.** அவர்களுக்காக கர்த்தரைத் துதிக்கிறேன்!

**இன்னும் 204 அறைகள் கட்டப்பட வேண்டும். ஒரு அறை கட்டுவதற்கு ஆகும் செலவு ₹ 3 லட்சம்.**

ஏவப்பட்டால், உங்கள் **குடும்பத்தின் சார்பாக**வோ, அல்லது உங்கள் **நிறுவனத்தின் சார்பாக**வோ ஒரு அறையைப் பொறுப்பெடுத்து கட்டிக் கொடுக்கலாம்.



நடைபெற்றுக் கொண்டிருக்கிற மருத்துவமனைக் கட்டுமானப் பணிகள்



**ஜெபியுங்கள்**, கர்த்தர் உங்களை **ஏவுவாரானால்**, உங்கள் நன்கொடைகளை **கீழே கொடுக்கப்பட்டுள்ள எமது வங்கிக் கணக்கில் நேரடியாக**வோ, அல்லது **'NEW LIFE SOCIETY'** என்கிற பெயரில் **Cheque / D.D. மூலமாக**வோ, கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பலாம். மட்டுமல்ல, **'www.jesusredeems.com/nls_hospital.php'** என்கிற எமது இணைய தளத்தின் மூலமாகவும் நன்கொடைகளை அனுப்பலாம். – **உங்கள் சகோதரன்.**

### உங்கள் நன்கொடைகளை அனுப்ப...

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries - Sri Lanka, |
| A/c No: | 7010 1000 7680 |
| Bank Name: | Hatton National Bank PLC. |
| Branch: | Nawam Mawatha - Colombo -02. |
| Swift Code: | HBLILKLXXXX. |

**குறிப்பு:** வெளி நாடுகளில் வசிக்கிற தேவ பிள்ளைகள், இந்த மருத்துவமனைக் கட்டுமானப் பணிக்காக நன்கொடைகளை அனுப்ப ஏவப்பட்டால்,

**+91 890 383 5315**

என்கிற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.

**Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA.**

***(Ph: 011 293 0152, 071 437 1111)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு திறப்பின் வாசல் ஜெபத்தில்

# இயேசு புதிய காரியங்களைச் செய்தார்!



நம் கர்த்தர் புதிய காரியங்களைச் செய்கிறவர். நம்முடைய தேசத்திலும், நம் ஜெபங்களைக் கேட்டு, புதியக் காரியங்களைச் செய்து வருகிறார். இதற்காகவே ஏற்படுத்தப்பட்ட திறப்பின் வாசல் ஜெபத்தில், ஏராளமான மக்கள் கலந்து கொண்டு, தேசத்திற்காக ஜெபித்து வருகின்றனர். 2017 **ஆகஸ்ட் மாதம் 5ம்** தேதி, கொழும்பு-காலிமுக வீதியிலுள்ள கிறிஸ்து நாதர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற திறப்பின் வாசல் ஜெபத்தில், சுமார் **205** பேர் மற்றும் 8 திருச்சபைகளின் போதகர்கள் கலந்து கொண்டு, தேசத்திற்காக திறப்பிலே நின்று ஜெபித்தனர்.

பாடல்-ஆராதனை வேளைகளை, சகோ. **ராகவன்** அவர்கள் நடத்த, தேசத்திற்காகவும் திருச்சபைகளுக்காகவும் சிறப்பு ஜெபங்களை **Dr. R. அன்புராஜன்** அவர்கள் நடத்த, தேவ ஜனங்கள் பாரத்தோடும், கண்ணீரோடும் இலங்கை தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காக தேவனை நோக்கி மன்றாடினர்.

இறுதியில், சகோ. **S. சாம் ஜெபராஜ்** அவர்கள், இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன் என்ற வாக்குத்தத்தின் அடிப்படையில் தேவ செய்தியளித்து, பிரார்த்தனைகள் ஏறெடுத்தபோது, தேவ ஜனங்கள் புதிய ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் பெற்று, களிகூர்ந்து மகிழ்ந்தனர்.

முன்னதாக, 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்கள் மூலமாக நன்மையும், விடுதலையையும் பெற்றவர்கள், சாட்சி கூறி தேவனை மகிமைப்படுத்தினர். தேவ நாமம் அளவில்லாமல் மகிமைப்பட்டது.



சகோ. ராகவன்



Dr. R. அன்புராஜன்



சகோ. S. சாம் ஜெபராஜ்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கர்த்தர் செய்த அற்புதங்களில் சில...

### இரட்டிப்பான ஆசீர்வாதம்!



எங்களுடைய மகன் சகாயராஜா திருமணமாகி 10 வருடங்களாகியும் குழந்தைப்பாக்கியம் இல்லாத நிலையில் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெப விண்ணப்பம் எழுதிக்கொடுத்து ஜெபித்து 3 மாதங்களுக்குள் மருமகள் கர்ப்பமடைந்து ஆணும், பெண்ணுமாக இரட்டைக்குழந்தைகளை பெற்றுக் கொள்ளவும் எங்களுடைய மகனும் குழந்தைகள் பிறந்தவுடன் மனமாற்றமடைந்து பெற்றோராகிய எங்களையும் நன்றாக கவனித்துக் கொள்ளவும் தேவன் கிருபை செய்தார். **- டேவிட்**, கொழும்பு.

### கேட்டேன் பெற்றுக் கொண்டேன்!



நானும் எனது குடும்ப உறுப்பினர்களும் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிப்பது வழக்கம். கடந்த பிப்ரவரி மாதம் ஜெபத்தில் கலந்து கொண்ட இறுதி ஜெப வேளையில் "கர்த்தர் நம்மை நினைத்தருளியிருக்கிறார்" என்ற வாக்குத்தத்தினால் தேவன் இடைப்பட்டார். வாகன வசதிகளை எதிர்பார்திருப்போருக்கு தேவன் அவற்றை அருளிச் செய்வார் எனவும் தேவ ஊழியரால் கூறப்பட்டது. அதே போன்று கடந்த ஜூன் மாதம் தேவன் எங்களுக்கு ஒரு காரைப் பெற்றுத்தந்து ஆசீர்வதித்தார்.
**- ஜோன்சன் பெர்னான்டோ**, நுவரெலியா.

### அற்புத சுகம் கொடுத்தார்!



நான் மிகவும் சுகவீனப்பட்டு மரணத்தருவாயில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். நான்கு வார்டுகள் மாற்றப்பட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டது. அந்த வேளையில் 'இயேசு விடுவிக்கிறார்' அலுவலகத்திலிருந்து தற்செயலாக தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினார்கள். அப்பொழுது நாங்கள் ஜெபம் செய்ய கேட்டுக் கொண்டோம். ஆகஸ்ட் மாத திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொள்ள தேவன் கிருபை செய்ய வேண்டும் என மன்றாடினோம். தேவன் அற்புதம் செய்து மரணத்தருவாயிலிருந்த என்னை குணப்படுத்தி திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொள்ள கிருபை செய்தார். **- கரிஷ்மா**, வத்தளை.

## கொழும்பில்

இயேசு விடுவிக்கிறார்

# திறப்பின் வாசல் ஜெபம்!

**நாள்:** 2017

**அக்டோபர் 7**

(சனிக்கிழமை)

நேரம்: **காலை 9:00 - மதியம் 2:00.**

இடம்:

***Christ Church Hall, Galle Face***

*(Near the Ramada Hotel)*

**தேவ செய்தியும், ஜெபமும்:**

**'இயேசு விடுவிக்கிறார்' குழுவினர்**

தேசத்திற்காக ஜெபிக்கவும், புதிய ஆண்டின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் **வாருங்கள்!**

நேரில் வர முடியாதவர்கள், உங்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வேண்டுமானால், கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்கு அனுப்புவோம்.

**கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.**

**முகவரி:** *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA. Ph: 011-2930 152.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பகுதி!

# புத்தியுள்ள ஸ்திரீ!



சிறப்புச் செய்தி:
சகோதரி ஜாய்ஸ் லாசரஸ்.

கடந்த (2017) ஆகஸ்ட் மாத இதழில், "ஒரு தகப்பன் குடிக்கிறவராக இருப்பாரானால், பிள்ளைகளும் குடிகாரர்களாகத்தான் மாறுவார்கள். அந்த பாவப் பழக்கம் ஒரு சாபமாக குடும்பங்களில் தொடர்ந்து வரும். ஆகவே, பெற்றோர்கள் தங்கள் குடும்பத்திற்கு சாபத்தை சேர்த்து வைக்கக் கூடாது. பிள்ளைகளுக்கு ஆசீர்வாதத்தைத்தான் சேர்த்து வைக்க வேண்டும்." என்பதாக வாசித்து முடித்திருந்தோம் அல்லவா?

இதோ, அதன் தொடர்ச்சி...

ஒரு சகோதரி, "என்னுடைய மகள் நன்றாகப் படித்தபடியினால், அவளை உயர் கல்வி படிக்க வைத்து, இப்பொழுது நல்ல ஒரு வேலையில் இருக்கிறாள். அவளுக்கு வரன் பார்க்கப் போனால், என் கணவருடைய தீய வாழ்க்கையைப் பார்த்து, என் மகளைப் பெண் கேட்க மறுக்கிறார்கள். என் கணவருடைய பாவப் பழக்கத்தின் நிமித்தமாக, அவளுடைய திருமணக் காரியம் தடைப்படுகிறது. ஜெபித்துக் கொள்ளுங்கள்.' என்று சொல்லி, எனக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பி இருந்தார்கள்.

ஆகவே, பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு ஆசீர்வாதத்தைச் சேர்த்து வைக்க வேண்டும். தங்களுடைய குடும்பத்திற்குள் சாட்சியான வாழ்க்கை வாழ வேண்டும். ஏலியைப் போல பிள்ளைகளை வளர்த்து விடக் கூடாது. பிள்ளைகளை நல் வழியில் நடத்த வேண்டும். (யாத். 34:7).

பொதுவாக, பெற்றோரிடத்திலுள்ள பாவப் பழக்கங்கள் எல்லாம் அப்படியே பிள்ளைகளிடத்திலும் வந்து விடுகிறது. ஆகவே, பெற்றோர் தங்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பி, கர்த்தருக்கு முன்பாகவும், தங்கள் குடும்பத்திற்குள்ளாகவும் பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டும்.

ஒருவேளை, பெரியவர்கள் தங்கள் வயது சென்ற நாட்களில் இரட்சிக்கப்படும்போது, தங்கள் வாழ்க்கையில் மீதி இருக்கிற கொஞ்ச நாட்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்வார்கள். அதே சமயத்தில், சிறு பிள்ளைகள், தங்கள் சின்ன வயதிலேயே தங்களைக் கர்த்தருக்காக ஒப்புக் கொடுக்கும்போது, அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் கர்த்தருக்காக ஊழியம் செய்ய ஏதுவாக இருக்கும். "அது எவ்வளவு பெரிய ஒரு ஆசீர்வாதம்!" என்று சற்று யோசித்துப் பாருங்கள்.

நாம் சிறு பிள்ளைகளை அற்பமாக எண்ணி விடவே கூடாது. அவர்கள் மீது நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அவர்களை ஆவிக்குரிய வாழ்க்கையில் அதிகம் கவனம் செலுத்தி வளர்க்க வேண்டும். இப்படியாக, குடும்பங்கள் பரிசுத்தமாக வாழும்போது, கர்த்தர் அந்தக் குடும்பங்களை ஆசீர்வதித்து, உயர்த்துவார்.

ஒரு குடும்பம் கர்த்தருக்குள் வர வேண்டும் என்றால், பாவத்திற்கு விலகி, பரிசுத்தமாக, கர்த்தருக்குள் வாழ்கிற குடும்பமாகக் காணப்பட வேண்டும்.

## கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்படியுங்கள்!

**"அதற்கு அவர்கள்: நாங்கள் திராட்சரசம் குடிக்கிறதில்லை; ஏனென்றால், ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாப், நீங்கள் பரதேசிகளாய்த் தங்குகிற தேசத்தில் நீடித்திருக்கும்படிக்கு,**

**நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் திராட்சரசம் குடியாமலும், வீட்டைக் கட்டாமலும், விதையை விதையாமலும், திராட்சத்தோட்டத்தை நாட்டாமலும், அதைக் கையாளாமலும், உங்களுடைய எல்லாநாட்களிலும் கூடாரங்களிலே குடியிருப்பீர்களாக என்று எங்களுக்குக் கட்டளையிட்டார்." எரேமியா 35:6,7.**

எரேமியாவின் காலத்தில், ரேகாபியருடைய குடும்பத்தினரான யூத ஜனங்களும், எருசலேமின் குடிகளுமாகிய கர்த்தருடைய ஜனங்கள், கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்படியாமல் போனார்கள்.

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியைப் பார்த்து, "பரதேசிகளாய் இருக்கிற இந்த ஜனங்களை என்னுடைய ஆலயத்திற்குள் கூட்டிக் கொண்டுபோய், நான் சொல்கிறபடி செய்." என்று சொல்லி, கர்த்தர் ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னார்.

கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, கர்த்தருடைய ஆலயத்தில் கர்த்தருடைய மனுஷனாகிய, '**ஆனான்**' என்னும் புத்திரருடைய அறையிலே திராட்சை ரசத்தினால் நிரப்பப்பட்ட குடங்களையும், கிண்ணங்களையும் ரேகாபியருடைய குடும்பத்தைச் சேர்ந்த புத்திரரின் முன்னே வைத்து, அவர்களை நோக்கி, "திராட்சை ரசத்தைக் குடியுங்கள்." என்று எரேமியா தீர்க்கதரிசி சொன்னார்.

அதற்கு அந்த ஜனங்கள், "நீங்கள் தலைமுறை தலைமுறையாக கூடாரம் போட்டு, நாடோடிகளாக இருக்க வேண்டும்.' என்று எங்களுக்குச் சொன்ன எங்கள் தகப்பனாகிய யோனதாபின் வார்த்தைக்கு, இந்நாள் வரை நாங்கள் கீழ்படிந்து, இந்த நாட்களில் நாங்கள் நன்றாக இருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எங்களுக்குக் கட்டளையிட்டபடியே, நாங்கள் திராட்சை ரசம் குடிக்கிறதில்லை. திராட்சை தோட்டத்தை நடுகிறதும் இல்லை. வயல்களில் விதைக்கிறதும் இல்லை. எங்கள் குடும்பம் இப்படித்தான் இருக்கும். நாங்கள் இப்படித்தான் இருப்போம்." என்று சொல்லி விட்டார்கள்.

அதாவது அந்த ஜனத்தை மாற்றும்படியாக, கர்த்தர் எரேமியாவினிடத்தில் பேசினார். ஆனால், அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்படியாமல் போய் விட்டார்கள்.

அதன் நிமித்தமாக, **"நான் அவர்களுக்கு விரோதமாகச் சொன்ன எல்லாத் தீங்கையும் வரப் பண்ணுவேன்."** (எரேமியா 35:17) என்று, கர்த்தர் மிகுந்த கோபத்தோடு எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாக அந்த ஜனங்களிடத்தில் சொல்லச் சொன்னார்.

எனக்கு அருமையானவர்களே, கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்படியும் போதுதான், நம்முடைய வாழ்க்கையில் ஆசீர்வாதம் உண்டாகும்.

நம்முடைய கர்த்தர் ஆசீர்வதிக்கிறவர்! கர்த்தர் நம்மோடு பேசுகிற வார்த்தைக்கு நாம் கீழ்படிந்து நடக்கும் போதுதான், அவர் நமக்காக வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை எல்லாம் நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் வழி நடத்தி வந்ததைப் பாருங்கள். எகிப்து தேசத்தில் அடிமைத்தனத்தில் இருந்த



தன்னுடைய ஜனங்களை விடுதலையாக்கும்படியாக கர்த்தர் **மோசேயை** அனுப்பி, அவர்களை மீட்டுக் கொண்டு வந்தார்.

பகலில் மேக ஸ்தம்பத்தினாலும், இரவில் அக்கினி ஸ்தம்பத்தினாலும் கர்த்தர் அவர்களை வழி நடத்திக் கொண்டு வந்தார். அவர்கள் கேட்டுக் கொண்டபடியே காடைகளினாலும், தேவ தூதர்களுடைய போஜனமான 'மன்னா'வினாலும் அவர்களை போஷித்து, குடிப்பதற்கு சுத்தமான தண்ணீரையும் கொடுத்து, வனாந்திரப் பாதையில் கர்த்தர் அவர்களை மிக அற்புதமாக நடத்திக் கொண்டு வந்தார்.

ஆனாலும், அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்படியாமல் போனார்கள். அதேபோல, அந்த ரேகாபியரின் குடும்பத்தினரும் கர்த்தருக்குக் கீழ்படியாதவர்களாக இருந்தார்கள்.

பெற்றோர், தங்கள் பிள்ளைகளுக்கு கீழ்படிதலைப் பற்றிச் சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும். மட்டுமல்ல, கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கிற பிள்ளைகளுக்கு நல்லொழுக்கத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

**"ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?"** (1 தீமோ. 3:4,5) என்று, கர்த்தருடைய வார்த்தை நம்மைப் பார்த்துக் கேட்கிறது.

எனக்கு அருமையானவர்களே, ஒருவேளை நீங்களும் கூட இன்றைக்கு கர்த்தருடைய ஊழியத்தைச் செய்து கொண்டிருக்கலாம். என்னுடைய ஊழியப் பாதையில், சில ஊழியக்காரர்களுடைய வாழ்க்கையை நான் பார்த்திருக்கிறேன்.

கர்த்தருக்காக நன்றாக ஊழியம் செய்வார்கள். ஆனால், தங்கள் சொந்தக் குடும்பத்தைக் கவனிக்க மாட்டார்கள். அப்படி இருக்கக் கூடாது. கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த குடும்பத்தையும் கவனிக்க வேண்டும். அதுதான் கர்த்தருக்குப் பிரியமானது.

ஒருவேளை உங்களுடைய கணவர் ஒரு ஊழியக்காரராகவோ, அல்லது திருச்சபையில் ஒரு போதகராகவே இருக்கலாம். இடைவிடாத தங்களுடைய ஊழியத்தின் நிமித்தமாக, உங்கள் குடும்பத்தை அவர்கள் கவனிக்காமல் கூட இருக்கலாம். ஒரு பக்கம், கர்த்தருக்காக அவர்கள் ஓய்வின்றி இரவு-பகலாக ஊழியம் செய்து கொண்டிருப்பதை நினைத்து நீங்கள் சந்தோஷப்படலாம்.

அதே சமயத்தில், உங்கள் குடும்பத்தை அவர்கள் கவனிக்காமல் இருப்பதைக் குறித்து நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கலாம். **கவலைப்படாதீர்கள்!** கர்த்தரிடத்தில் ஜெபியுங்கள்! கர்த்தர் சூழ்நிலையை உங்களுக்குச் சாதகமாக மாற்றித் தருவார்.

எனக்கு அருமையான சகோதரியே, இன்றைக்கு உங்கள் குடும்பம் இடிக்கப்பட்ட நிலைமையில் இருக்கிறதா? சொந்தக் கணவரால் கைவிடப்பட்ட நிலைமையில் இருக்கிறீர்களா? "எனக்கு யாருடைய ஆறுதலும் இல்லையே!" என்று சொல்லி, கலக்கத்திற்கு மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்களா? உங்கள் வாழ்க்கை கண்ணீரின் பள்ளத்தாக்கில் தத்தளித்துக் கொண்டு இருக்கிறதா?

**கலங்காதீர்கள்!** கர்த்தர் உங்களைக் காண்கிறார்! அவரையே பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அவருடைய வார்த்தைக்குக் கீழ்படியுங்கள். அவர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் அற்புதமாக நடத்தி, ஆசீர்வதிப்பார்!

ஊழியத்தின் ஆரம்ப நாட்களில், எங்கள் ஊழியத்தில் ஒரு சகோதரர் இருந்தார். அவர் இரவு-பகல் என்று பாராமல், கிராமம் கிராமமாகச் சென்று, மிகுந்த உற்சாகத்தோடு கர்த்தருடைய ஊழியத்தைச் செய்தார். பார்க்கிற ஜனங்களுக்கு எல்லாம் எப்படியாவது சுவிசேஷத்தைச் சொல்லி விடுவார்! ஆனால், தன் குடும்பத்தை சரியாகக் கவனிக்கவே மாட்டார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலுமாவடி
திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

# உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்!



உங்களுக்கு ஏதோ ஒரு துக்கம் இருக்கிறது! வியாதியா? வேதனையா? கடன் பாரமா? பிசாசின் போராட்டமா? நிந்தையா? அவமானமா? எதுவானாலும், உங்களை துக்கப்படுத்துகிற காரியம் சந்தோஷமாக மாறும். இதற்காக இம்மாதம் செப்டம்பர் 30ம் தேதியில், நம் தேவனுடைய கூடாரத்தில் உபவாசித்து திறப்பிலே நின்று ஜெபிக்கப் போகிறோம். உங்களுக்காக ஜெபிக்க வேண்டுமானால், (கடிதம், E-Mail, Phone, Fax அல்லது நேரடியாக) உங்கள் ஜெபத் தேவைகளை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அன்றைய ஜெப நாளில் ஜெபிக்கக் கூடி வருகிற சுமார் 40,000க்கும் அதிகமான தேவ பிள்ளைகளும் இணைந்து, உங்களுக்காக ஜெபிப்போம். இயேசு கிறிஸ்து உங்களுக்கு அற்புதம் செய்வார்! கடந்த நாட்களில் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தைக் கேட்டு, கர்த்தர் செய்த அனேக அற்புதங்களில் சிலவற்றைப் பாருங்கள்:

## 11 வருடங்கள் கழித்து, குழந்தை பாக்கியம்!



என் மகனுக்குத் **திருமணமாகி, 11 வருடங்கள் குழந்தை பாக்கியம் இல்லாமல்** இருந்தது.

திறப்பின் வாசல் ஜெபத்தில் அவனுக்காக ஜெபித்த ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு, 11 வருடங்களுக்குப் பிறகு, என் மருமகளின் கர்ப்பத்தை ஆசீர்வதித்து, அழகான ஒரு **பெண் குழந்தையைக் கொடுத்து**, எங்கள் கண்ணீரைத் துடைத்தார். **– அபூர்வம் இயேசுதாசன், சிவகாசி.**

## தோல் வியாதி சுகமானது!



நான் **தோல் வியாதி**யினால் பாதிக்கப்பட்டு, என் **சரீரம் முழுவதுமாக** இருந்த **சொரி சிரங்கினால்** ஒரு வருட காலமாக கஷ்டப்பட்டேன்.

ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என்னைத் தொட்டு, தோல் **வியாதியை** முற்றிலுமாக **மறையப் பண்ணி**, எனக்கு நல்ல **சுகத்தைக் கொடுத்தது**. **- A. ஜெபசிங், பெருங்குளம்.**

## இரட்டிப்பான நன்மை!



எங்களுக்குத் திருமணமாகி **4 வருடங்களாகியும், குழந்தை பாக்கியம் இல்லாமல்** இருந்தது. நாங்கள் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்து விட்டுப் போன அந்த மாதமே கர்த்தர் என் மனைவியின் கர்ப்பத்தை ஆசீர்வதித்தார்.

ஏற்ற வேளையில், நல்ல சுகப் பிரசவத்தில், ஆணொன்றும், பெண்ணொன்றுமாக **இரட்டைக் குழந்தைகளைப்** பெற்றெடுக்க கர்த்தர் அவளுக்குக் கிருபை செய்து, எங்கள் **கண்ணீரைத் துடைத்தார்**. **- எட்வின், பெங்களூரு.**

## மன்னித்து, சுகம் தந்தார்!



என் இடது **கையிலும்**, வலது **காலிலும்** உண்டாயிருந்த **வலியினால்**, மிகவும் வேதனைப்பட்டேன். **24 மணி நேரமும்** பயங்கரமாக **வலி இருக்கும்**. எவ்வளவுதான் மருந்து-மாத்திரைகள் சாப்பிட்டாலும் வலி குறையாது. நிம்மதியாகத் **தூங்கவும் முடியாது**. மட்டுமல்ல, நானும் **பாவ வாழ்க்கைக்குள் இருந்தேன்**.

ஜெப வேளையில் என் பாவங்களை அறிக்கையிட்டு ஜெபித்தேன். கர்த்தர் மனமிரங்கி என் **பாவங்களை மன்னித்து**, பாவ மன்னிப்பின் நிச்சயத்தையும் எனக்குத் தந்து, எல்லா **வேதனைகளையும் நீக்கி**, அற்புதமான **சுகத்தையும்** எனக்குத் **தந்தார்**. **- R. ரவி ஸ்டான்லி, திருச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன் பிரச்சனை நீங்கியது!



எனக்கிருந்த **ஒரு லட்ச ரூபாய் கடன்** பாரத்தினால், **2 வருடங்களாக** மிகவும் கஷ்டப்பட்டேன். திறப்பின் வாசல் ஜெபத்தில் சகோதரர் அவர்கள் கொடுத்த தேவ செய்தியின் மூலமாக தொடப்பட்டு, மிகுந்த பாரத்தோடு பொருத்தனை செய்து ஜெபித்தேன்.

ஜெபித்து விட்டுப் போன அடுத்த மாதமே **முழுக் கடனையும் அடைத்து முடிக்க,** கர்த்தர் **கிருபை செய்தார்.**

**– A. ஜாய்ஸ், திருமங்கலம்.**

## வேலை கொடுத்தார்!



நானும், என் மனைவியும் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தோம்.

ஒரு சில காரணங்களால் அந்த வேலையை விட்டு விட்டோம். **3 மாதங்களாக** எவ்வளவோ பிரயாசப்பட்டும், **வேலை கிடைக்கவில்லை.** 'இனிமேல் வேலை கிடைக்காது.' என்கிற மன நிலைமையில், திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, மிகுந்த பாரத்தோடு தொடர்ந்து ஜெபித்து வந்தோம். கர்த்தர், மதுரையிலுள்ள **கல்லூரியில்** ஒரு நல்ல **வேலையை** எனக்குக் **கட்டளையிட்டார்.**

**– R. இம்மானுவேல், நாசரேத்.**

## பூரண சுகத்தை அருளினார்!



சுமார் **12 வருடங்களுக்குப் பிறகு,** கர்த்தர் எனக்கு ஒரு **பெண் குழந்தையைக்** கொடுத்தார்.

பிறந்த 5வது நாளில், **மஞ்சள் காமாலை** நோயினாலும், பிறப்புறுப்பில் உண்டான **இரத்தக் கசிவினாலும்** பாதிக்கப்பட்டு, குழந்தை மிகவும் **மோசமான நிலைமைக்குள்ளானது.**

இந்நிலையில், திறப்பின் வாசல் ஜெபத்தில் அவளுக்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு, குழந்தைக்குப் **பூரணமான சுகத்தைக் கொடுத்தார்.**

**– C. கவிதா, ஜம்புலிங்கபுரம்.**

## விசுவாசித்தேன், பெற்றுக் கொண்டேன்!



படித்து முடித்து விட்டு, சரியான ஒரு **வேலை கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்** கொண்டிருந்த என் மகளின் வேலைக்காகவும், **தடைப்பட்டுக்** கொண்டிருந்த அவளுடைய **திருமணத்திற்காகவும்** திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்தோம்.

கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, அரசு வங்கியில் அவளுக்கு ஒரு நல்ல **வேலையைக் கட்டளையிட்டு,** ஏற்ற ஒரு மணவாளனையும் கொடுத்து, அவளுடைய **திருமணத்தையும்** அற்புதமாக **நடத்திக் கொடுத்தார்.**

**– D. ஜேக்கப் செல்வதாஸ், கட்டிமாங்கோடு.**

## கட்டி மறைந்தது!



என் இடது **காதுக்குள்** உண்டான ஒரு **கட்டி,** நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருந்தது. வலியினால் **மிகவும் வேதனைப்பட்டேன்.** ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள் கேட்டுக் கொண்டபடியே, அந்தக் காதில் கை வைத்து ஜெபித்தேன்.

கர்த்தர் மிக அற்புதமாக அந்தக் **கட்டியை மறையச் செய்தார். – பாத்திமா, கரையான்பாளையம்.**

இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார்! உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்தை கடிதத்தில் எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம். நீங்களும் இந்த நாளில் உபவாசித்து, விசுவாசத்தோடு ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்கும் அற்புதம் செய்து, உங்கள் துக்கத்தை மாற்றுவார். திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று, காலை 9:00 – மாலை 3:00 மணிவரை ஜெபிப்போம். நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள். ஜெபத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

– உங்கள் சகோதரன்.

நாலுமாவடி திறப்பின் வாசல் ஜெபம்!

**உங்கள் அற்புதத்தின் நாள்: 2017**

**செப்டம்பர் 30**

(கடைசி சனிக்கிழமை)

**Address:**
**Standing in the Gap Prayer,**
**Nalumavadi-628 211,**
**Thoothukudi Dist., India.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் மத்தியில், எழுப்புதல் நாயகர் இயேசு!



**'குடும்பங்கள் கர்த்தருக்காக எழும்ப வேண்டும்!'** என்கிற உன்னதமான நோக்கத்தோடு, பெண்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாக, நமது **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியத்தின் மூலமாக பெண்கள் மத்தியில் பல விதமான ஊழியங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

## பேர்னாம்பட்டு-பெண்கள் எழுப்புதல் முகாம்!

கடந்த (2017) ஜூலை 8ம் தேதி, வேலூர் மாவட்டம்-**பேர்னாம்பட்டில்** 'எழுப்புதல் ஜெபக் கூடாரம்' அருகில் உள்ள மைதானத்தில் வைத்து, **'பெண்கள் எழுப்புதல் முகாம்!'** நடைபெற்றது. இந்த முகாமில் திரளான பெண்கள் கலந்து கொண்டதோடு, அனேக திருச்சபை போதகர்களும், முழு நேர ஊழியர்களும் கலந்து கொண்டு முகாமை சிறப்பித்தனர்.



சகோ. தினகரன்

பாடல்-ஆராதனை வேளையைத் தொடர்ந்து, சகோ. **தினகரன்** அவர்கள், பெண்கள் நடுவே எழுப்புதல் உண்டாகத் தக்கதாக கருத்தான ஜெபத்தை ஏறெடுத்தார்கள்.

அதைத் தொடர்ந்து நமது சகோதரி **ஜாய்ஸ் லாசரஸ்** அவர்கள், "சமுதாயத்தில் பெண்கள் எப்படி சாட்சி உள்ள வாழ்க்கை வாழ வேண்டும்?" என்று, வேத வசனத்தை மையமாக வைத்து, கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டு, முகாமில் கலந்து கொண்டவர்களின் ஆசீர்வாதத்திற்காக சிறப்பு ஜெபத்தை ஏறெடுத்தார்கள்.

இந்த முகாமிற்கான சகல ஏற்பாடுகளையும், சகோ. தினகரன் அவர்கள் தலைமையில், **'இயேசு நேசிக்கிறார்'** ஜெபக் குழுவினர் மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள்.





## கும்பகோணம்-பெண்கள் புது வாழ்வு முகாம்!

அதைத் தொர்ந்து, கடந்த (2017) ஜூலை 22ம் தேதியன்று, தஞ்சாவூர் மாவட்டம்-**கும்பகோணத்தில்** உள்ள **'ஒரே வழி இயேசு!'** பேராலயத்தில் வைத்து, **பெண்கள் புதுவாழ்வு முகாம்** மிகச் சிறப்பாக நடைபெற்றது. திரளான பெண்கள் இம்முகாமில் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதகர் **ஜோசப் மனோகரன்** அவர்கள் ஆரம்ப ஜெபம் செய்தார்கள். செய்தி வேளையில், நமது சகோதரி ஜாய்ஸ் லாசரஸ் அவர்கள், **"சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி;..."** (மீகா 4:13) என்கிற வேத வசனத்தின் அடிப்படையில், பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில பரிசுத்தவான்களின் வாழ்க்கையை மையமாக வைத்து, கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள்.

ஜெப வேளையில், அனேகர் கர்த்தருடைய பிரசன்னத்தினால் தொடப்பட்டு, தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.


போதகர் ஜோசப் மனோகரன்



இந்த முகாம்களில் கலந்து கொண்டவர்களில் அனேகர், தங்களை கர்த்தருக்காக அர்ப்பணித்தார்கள். அனேகர் தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலையைப் பெற்றுக் கொண்டார்கள். அற்புதங்களைப் பெற்றுக் கொண்டவர்களில் அனேகர் சாட்சி சொல்லி, கர்த்தரை மகிமைப் படுத்தினார்கள்.

மட்டுமல்ல, பல விதமான போராட்டங்களோடும், பிரச்சனைகளோடும் வந்திருந்த அனேகப் பெண்கள் கர்த்தரிடத்திலிருந்து ஆறுதலையும், சமாதானத்தையும் பெற்றுக் கொண்டு, மகிழ்ச்சியோடு திரும்பிச் சென்றனர். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! - ஒருங்கிணைப்பாளர்.


## கிளிநொச்சி — இயேசு விடுவிக்கிறார்

கெத்செமனே ஜெப மையம்
GETHSEMANE PRAYER CENTRE

முகவரி: இல. 31, உதயநகர் கிழக்கு,
நாகதம்பிரான் கோவில் வீதி,
கிளிநொச்சி.
Ph: 021 - 2285 284.

அலுவலக நேரம் தினமும் காலை 9:00 - மாலை 7:00 மணிவரை.

**இங்கு நடைபெறும் ஊழியங்கள்!**

**பெண்கள் ஜெபம்!**
(புதன்கிழமைதோறும்)
12:00 P.M. - 3:00 P.M.

**உபவாச ஜெபம்!**
(சனிக்கிழமைதோறும்)
9:00 A.M. - 12:00 Noon

**சினெர்ஜியா** வாலிபர் கூட்டம்!
(ஞாயிற்றுக்கிழமைதோறும்)
3:00 P.M. - 4:00 P.M.

**அற்புத விடுதலை பிரார்த்தனை!**
(ஒவ்வொரு மாதமும் 2வது சனிக்கிழமை)
5:00 P.M. - 7:00 P.M.

**முழு இரவு ஜெபம்**
(போயா நாளின் முந்தைய தினம்)
இரவு 10:00 P.M. - காலை 5:00 A.M.

**இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயம் பெற்றவர்கள்!



பிரியமானவர்களே,

"ஜெயம் பெற்றவர்கள்!" என்கிற இந்தப் பகுதியின் மூலமாக நான் உங்களை சந்திப்பதில் மிகவும் சந்தோஷப்படுகிறேன்! இந்தப் பகுதியின் மூலமாக அனேகர் ஆசீர்வதிக்கப்பட்டு வருவதை அறிந்து, நான் கர்த்தரை துதிக்கிறேன்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் ஜெயம் பெற்று, ஆசீர்வாதமாக இருக்கிற அனேக தேவ பிள்ளைகள் கர்த்தருக்கு சாட்சியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



இம்மாதம், பொள்ளாச்சி–'பெத்தநாயக்கனூர்' என்கிற இடத்தைச் சேர்ந்த, சகோ. பீட்டர் அவர்கள், தன்னுடைய அனுபவத்தை உங்களோடு கூட பகிர்ந்து கொள்கிறார்கள். வாசித்து, தேவாசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். – உங்கள் சகோதரன்.

## உறுதியாய் பற்றிக் கொண்டோம்! உயர்த்தப்பட்டோம்!

முதலாவது நான் பொள்ளாச்சியில்தான் கடை வைத்திருந்தேன். அங்கு வியாபாரம் சரியில்லாத காரணத்தினால், கடந்த 2000மாவது ஆண்டு, "ஒரு கிராமத்தில் கடை வைக்க வேண்டும்." என்று எண்ணி, 'பெத்தநாயக்கனூர்' என்கிற ஒரு கிராமத்திற்கு வந்து கடை வைக்க முயற்சி செய்தபோது, அங்கு இடமே கிடைக்கவில்லை. கடைசியில், அந்தக் கிராமத்திற்கு ஒதுக்குப் புறமாக வாடகைக்கு ஒரு இடம் கிடைத்தபடியினால், 3 வருடங்களாக அங்கு கடை வைத்திருந்தேன்.



அந்த 3 வருடங்களும் என் வாழ்க்கையில் ஒரு பயங்கரமான போராட்டத்தின் காலமாகத்தான் இருந்தது. காரணம், நான் வைத்திருந்த கடை, ஊருக்கு ஒதுக்குப் புறமான ஒரு இடத்தில் இருந்தபடியினால், அங்கு மக்கள் யாருமே வருவதில்லை. கடையில் அவ்வளவாகப் பொருட்களும் இருக்காது! அப்படியே யாராவது வந்து ஒரு பொருள் கேட்டாலும், 'இல்லை!' என்றுதான் சொல்வேன். மொத்தத்தில், சுத்தமாக வியாபாரமே இல்லாமல்தான் இருந்தது.

அந்த ஊரிலுள்ள சிலர், "இந்த இடத்தில் 6 மாதங்களுக்கு மேல் உன்னால் நிலைத்து இருக்க முடியாது." என்றுதான் சொன்னார்கள். அந்தக் கிராமத்திலுள்ள சில புற ஜாதி மக்கள், "சின்னக் கடையை வைத்திருக்கிறான். பெட்டிக் கடை மாதிரி இருக்கிறது." என்று கிண்டலாகப் பேசுவார்கள்.

காலையில் இருந்து சாயங்காலம் வரைக்கும் வியாபாரம் ஆன மாதிரியே இருக்காது. ஆனால், இரவு வீட்டிற்குப் போகும்போது, ஒரு நிறைவான மனதோடுதான் போவேன். "சொந்தமாக நமக்கென்று ஒரு இடம் கிடைத்தால், அந்த இடத்திலிருந்து கொண்டு, ஏதாவது செய்யலாமே!" என்று எண்ணி, அதற்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று ஒருநாள் ஒரு சகோதரர், "ஒரு இடம் இருக்கிறது." என்று என்னிடத்தில் சொன்னார்.

ஆனால், அந்த இடத்தை வாங்குவதற்கு என் கையில் பணம் இல்லாத நிலைமையில், என் தகப்பனார் மூலமாக ₹ 1,000/– முன் பணமாகக் கொடுக்க, கர்த்தர் கிருபை செய்தார். அதன் பிறகு என் மனைவியின் நகையை வங்கியில் அடைமானம் வைத்து, அந்த இடத்தை வாங்கி விட்டோம். இடம் வாங்கிய 10வது நாளே, "கடையைக் கட்ட வேண்டும்." என்று தீர்மானித்து, ஜெபிக்க ஆரம்பித்தோம்.

அந்த சமயத்தில், நான் ஒரு வங்கியில் **Business Correspondant** ஆக ஒரு சின்ன வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அதை வைத்து, அந்த வங்கியில் கடன் கேட்டுப் பார்த்தேன். ஆனால் கடன் கிடைக்கவில்லை. 3 வருடங்களாக நான் அதற்காக ஜெபித்துக் கொண்டே இருந்தேன்! எப்பொழுதும் ஜெபித்துக் கொண்டே இருந்தேன்! அந்த 3 வருடங்களையும், "ஜெபிப்பதற்காக கர்த்தர் கொடுத்த நாட்கள்!" என்றுதான் நினைத்துக் கொண்டேன்.

அந்த ஊரிலுள்ள அனேகர் என்னிடத்தில், "நீங்கள் எப்பொழுதும் ஜெபிக்கிறீர்கள்! ஞாயிற்றுக் கிழமையானால், ஆலயத்திற்குப் போகிறீர்கள்! எப்பொழுதும் ஜெபத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்! ஆனால், நீங்கள் என்னத்தைச் சம்பாதித்து வீட்டீர்கள்? என்னத்தை சாதித்து விட்டீர்கள்? இப்படியாக ஒரு ஓரத்தில்தானே சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்! வேறு ஏதாவது பரிகாரம், அல்லது பூஜை செய்யுங்கள். அப்பொழுது உங்களுக்கு நல்ல காரியம் நடக்கும்!" என்று எனக்கு ஆலோசனை கொடுக்கத் தொடங்கினார்கள்.

ஆனால் நான் அவர்களிடத்தில், "ஜெபித்தால் எல்லாம் சரியாகி விடும்!" என்று சொன்னேன். அந்த 3 வருடங்களும், அவ்வளவு நெருக்கத்திலும் கூட நான் யாரிடத்திலும் ஒரு பைசா கூட கடன் வாங்கவில்லை. "யாரிடத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் வாங்கக் கூடாது." என்பதுதான், என்னுடைய முதல் ஜெபமாகவும் இருந்தது. அந்த ஊரில் இருந்த வட்டிக்குக் கொடுக்கிற அனேகர், "இவனிடத்தில் பணம் இல்லை. எப்படியாவது வட்டிக்குப் பணம் வாங்க ஆயத்தமாக இருப்பான்." என்று எண்ணி என்னை அணுகினார்கள்.

ஆனால் என் கையில் பணம் இல்லாமல் இருந்தும், கர்த்தருக்குள் எப்பொழுதும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தேன். வெளியே இருந்து பார்க்கிறவர்கள் எல்லோரும், "கை நிறைய பணம் வைத்திருக்கிறார்கள் போலும், சும்மா உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்!" என்று சொல்லி, மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால், நாங்கள் எப்போதும் ஜெபத்திலேயேதான் இருந்தோம். கடையில் வியாபாரமே இல்லாமல் இருந்தாலும், நாங்கள் நிம்மதியாக இருந்தோம்.

என்னுடைய தாயார் என்னுடைய நிலைமையைப் பார்த்து, "இந்தச் சின்ன வயதில், நீ எங்களோடு கூட இருந்து கொண்டு ஏன் இவ்வளவு சிரமப்படுகிறாய்? நாங்கள் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. நீ உன் மாமனார் வீட்டோடு போய் இருந்து வியாபாரம் செய்." என்று ஒரு ஆலோசனை சொன்னார்கள்.

ஆனால் நானோ, "அப்படியல்ல, கர்த்தர் என்னை ஆசீர்வதிப்பார்!" என்று மிகுந்த விசுவாசத்தோடு சொன்னேன். எவ்வளவு பிரச்சனைகள், போராட்டங்கள், நெருக்கங்கள் வந்த போதிலும், **ஒருநாள் கூட நான் கர்த்தரைக் குறை சொன்னதே கிடையாது.** நான் குறை சொல்கிற அளவுக்கு, கர்த்தர் என்னை விட்டதும் இல்லை. என் கையில் சுத்தமாக காசில்லாமல் இருந்த போதும் கூட, எனக்கு நிம்மதியான தூக்கம் வந்தது.

எந்தப் பிரச்சனையானாலும் சரி, நான் யாரிடத்திலும் பகிர்ந்து கொள்ளவும் மாட்டேன். என் மனைவியினிடத்தில் கூட நான் சொல்ல மாட்டேன். ஏதோவொரு விதத்தில் பிரச்சனைகளை அவளாக அறிந்து கொண்டு, அதற்காக ஜெபிப்பாள். வீட்டிற்குத் தேவையான பொருட்களை எல்லாம் நான் தவறாமல் வாங்கிக் கொடுத்து விடுவேன்.

இந்நிலையில், கடந்த 2009ம் வருடம் நாலுமாவடியில் நடைபெற்ற வியாபாரிகள் ஆசீர்வாத உபவாச ஜெபத்தில், முதன் முதலாக குடும்பமாகக் கலந்து கொண்டேன். அன்றைக்கு நாங்கள் ஒரு வாடகைக் காரில்தான் வந்தோம். அன்றைய ஜெப வேளையில், "இயேசுவே, எங்களுக்கு சொந்தமாக ஒரு கார் வேண்டும்." என்று கேட்டேன். அதேபோல் 2010ம் வருடத்தில் சொந்தமாக ஒரு கார் வாங்க கர்த்தர் எங்களுக்குக் கிருபை செய்தார்.
கடந்த 2014ம் வருடம் வியாபாரிகள் ஆசீர்வாத உபவாச ஜெபத்தில், குடும்பமாக வந்து கலந்து கொண்டேன். அன்றைய ஜெபத்தில் நமது சகோதரர் அவர்கள், "சொந்தமாக இடம் இல்லாத வியாபாரிகளுக்கு கர்த்தர் சொந்தமாக இடம் கொடுப்பார்! அதற்காக நீங்கள் ஜெபியுங்கள்." என்று சொன்னார்கள்.

நாங்களும் அப்படியே, "ஆண்டவரே, நீர் எங்களுக்கு சொந்தமாக ஒரு இடத்தைக் கொடுத்து, ஒரு கடையைத் தந்து விட்டீர் என்றால், நாங்கள் சாட்சி சொல்லி, உமது நாமத்தை மகிமைப்படுத்துவோம்." என்று, ஒரு பொருத்தனையோடு உருக்கமாக ஜெபித்தோம். கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு, நாங்கள் கேட்டுக் கொண்டபடியே 2 மாதத்திற்குள்ளாகவே எங்களுக்கு சொந்தமாக ஒரு இடத்தைக் கொடுத்து, அதில் ஒரு கடையைக் கட்டுவதற்கும் கிருபை பாராட்டினார்.

"அது எப்படி?" என்றால், நான் வேலை பார்த்துக் கொண்டிருந்த அந்த வங்கியில், ஏற்கெனவே நான் கடன் கேட்டும், அவர்கள் எனக்குக் கொடுக்காதபடியினால் திரும்பவும் போய் அவர்களிடத்தில் கடன் கேட்கவில்லை. ஆனால், எனக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலையில் நான் உண்மை உள்ளவனாக இருந்தேன். அந்த வங்கி மேலாளர், ஒரு புற ஜாதி மனிதனாக இருந்த நிலையில், "ஒரு கிறிஸ்தவன் எப்படி இருப்பான்?" என்பதை என் சாட்சியுள்ள நடக்கையின் மூலமாக அறிந்து கொண்டார். அவர் என் உண்மையுள்ள நடக்கையைப் பார்த்து, எனக்கு ₹ 5 லட்சம் கடன் கொடுத்தார். அந்தப் பணத்தை வைத்து கடையைக் கட்டினோம். கடந்த 2015 ஏப்ரல் 15ம் தேதி அந்தக் கடையைத் திறக்கவும் கர்த்தர் உதவி செய்தார்.

எந்த நிலைமையிலும், நாங்கள் **கர்த்தரை மாத்திரமே உறுதியாகப் பிடித்துக் கொண்டோம்**. ஒரு வருடத்திற்குள்ளாக கர்த்தர் எங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுத்து விட்டார்! இப்பொழுது, அந்த ஊரிலேயே எங்கள் கடைதான் பெரிய கடை!

ஒரு காலத்தில், என்னை 'வெளியூர்காரன்' என்று சொல்லி, அந்த ஊரிலுள்ள சிலர் மது அருந்து விட்டு, 'கடன் கொடு' என்று கேட்டு, என் கடைக்கு முன்பாக வந்து ரகளை செய்வார்கள். அப்படிக் கொடுக்கவில்லை என்றால், என்னிடத்தில் சண்டை போடுவார்கள்.

ஆனால் இன்றைக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. என்னிடத்தில் சண்டை போட்டவர்கள் எல்லோரும் இப்போது சமாதானமாக, மரியாதையாகப் பேசுகிறார்கள். எனக்கு விரோதமாக எழும்பியவர்கள் எல்லோரையும், கர்த்தர் என் பட்சமாகக் கொண்டு வந்தார். காரணம், அவர்களுக்கு நான் எல்லா விதத்திலும் உதவி செய்து கொடுக்கக் கூடிய சூழ்நிலைகளை கர்த்தரே உருவாக்கி, அவர்களை என்னிடத்தில் சமாதானமாக இருக்கச் செய்தார்.

மட்டுமல்ல, கடையிலும், வங்கியிலுமாக, தினந்தோறும் வேலை செய்வதற்கு வேண்டிய பெலனை கர்த்தர் எனக்குக் கொடுத்திருக்கிறார். தினந்தோறும் எங்கள் வீட்டு ஜெப அறையில் அதிகாலை 3:00 மணியில் இருந்து ஒவ்வொரு மணி நேரமாக, முதலாவது என் தகப்பனார், பிறகு நான், அதைத் தொடர்ந்து என் தாயார், கடைசியாக என் மனைவி என்று, ஒவ்வொருவராக தனி ஜெபம் செய்வோம்.

மட்டுமல்ல, நாலுமாவடி-திறப்பின் வாசல் ஜெபத்திற்கு எங்கள் ஊரில் இருந்து அனேகரை அழைத்துக் கொண்டு வருவோம். வாரத்தில் மற்ற நாட்களை விட ஞாயிற்றுக் கிழமைதான் வியாபாரம் இருக்கும். என்றாலும், ஞாயிற்றுக் கிழமைதோறும் கடையை அடைத்து விட்டு, ஆலய ஆராதனைக்குச் சென்று விடுவோம்.

இப்படியாக நாங்கள் கர்த்தருக்கு முதலிடம் கொடுத்து, எந்தவொரு காரியமானாலும் ஜெபித்து, அவருடைய ஆலோசனையைப் பெற்று செய்கிறபடியினால், கர்த்தர் எங்களை ஆசீர்வதித்து வருகிறார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேவனுடைய திட்டம் நிறைவேறுகிறது...

# தேவனுடைய கூடாரம்!

இந்தியாவின் எழுப்புதல் காரியத்தில், கர்த்தர் மிகவும் தீவிரமாக இருக்கிறார்! **எழுப்புதலுக்காக தீவிரமாக நாம் ஜெபிக்க வேண்டும்** என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். இதற்காகத்தான் கர்த்தர் தேவனுடைய கூடாரம் கட்டுவதற்கான இடத்தை இலவசமாக கொடுத்து, கூடாரத்தைக் கட்டி எழுப்பி வருகிறார். இப்பொழுதே தேவனுடைய கூடாரத்தில் **தினமும் உபவாசித்து, எழுப்புதலுக்காக ஜெபித்து வருகிறோம்.**

**'இந்தியாவின் ஜாமக்காரர்கள்!'** என்கிற ஜெபக் குழுவினர் **தினமும் உபவாசத்தோடு ஜெபிக்கிறார்கள்.** தேவனுடைய கூடாரம் பிரதிஷ்டை செய்யப்பட்டதும், **ஜெபக் கோபுரத்தில் 24 மணி நேரமும் இடைவிடாத ஜெபம் நடைபெற வேண்டும்** என்று, கர்த்தர் விரும்புகிறார்.

எழுப்புதல் வந்த பிறகும், அந்த எழுப்புதல் பாதுகாக்கப்பட ஜெபம் மிகவும் அவசியம். ஆகவே, இயேசு கிறிஸ்துவின் வருகை வரை இடைவிடாமல் ஜெபமும், துதியும் தேவனுடைய கூடார ஜெபக் கோபுரத்தில் ஏறெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்! இதற்கான ஆயத்தங்களை இப்போதே செய்ய ஆரம்பித்திருக்கிறோம்!

### தடைகளை நீக்கி, வாய்க்கப் பண்ணினார்!



நான் சொந்தமாக வீடு கட்டத் தீர்மானித்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டபோது, ஒருவரால் **ஏமாற்றப்பட்டேன்.** அதன் நிமித்தமாக நான் **பணக் கஷ்டத்திற்குள்ளாகி,** சில வருடங்கள் **வீடு கட்டுகிற காரியம் தடைப்பட்டு** நின்று போயிற்று.

இந்நிலையில் நான் நாலுமாவடி-திறப்பின் வாசல் உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டு, தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காக ஒரு சிறு தொகையைக் காணிக்கையாகக் கொடுத்து, ஜெபித்து விட்டுப் போனேன். கர்த்தர் எல்லாத் **தடைகளையும் நீக்கி,** ஜெபித்து விட்டுப் போன 3 மாதங்களுக்குள் **சொந்தமாக ஒரு வீட்டைக் கட்டி முடிக்கக் கிருபை** செய்தார். - **L. பிரசாத் குமார், சென்னை.**

கட்டுமானப் பணிகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், தேவனுடைய திட்டத்தின்படியே, தேவனுடைய கூடாரம் ஒரு ஜெபக் கேந்திரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கு வாரந்தோறும் முதியோர்களுக்கான, **'சிமியோன் ஜெபம்!'**, விதவைகளுக்கான, **'அன்னாள் ஜெபம்!'** மற்றும் **'அற்புத விடுதலைப் பிரார்த்தனை!'**, மாதந்தோறும் **'திறப்பின் வாசல் ஜெபம்!'**, **'முழு இரவு ஜெபம்!'**, **'மூத்த குடிமக்கள்** மற்றும் **விதவைகளுக்கான 'சிறப்புக் கூடுகை!'**, **'மாற்றுத் திறனாளிகள் கூட்டம்!'**, **'வாலிபர் ஜெபம்!'** (Synergia!), **'சிறுவர் ஜெபம்!'** மற்றும் **'சுவிசேஷகர்கள் ஐக்கியக் கூடுகை!'**, தினந்தோறும் இந்தியாவிற்காக ஜெபிக்கிற, **'ஜாமக்காரன் ஜெபம்!'**, **'அறுவடை வேதாகமக் கல்லூரி'**
போன்ற ஊழியங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மேலும், இங்கு **செயல்பட்டு வரும் வரவேற்பறைக்கு** (Reception) தினந்தோறும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் நேரடியாக வந்து ஜெபித்து, தேவ ஆலோசனைகளையும், அற்புதங்களையும் பெற்றுச் செல்கிறார்கள்.

இனி, தேவனுடைய கூடாரத்தில் ஜெபக் கோபுரத்தை கட்ட ஆரம்பிக்க இருக்கிறோம். இதற்காக **உங்கள் ஜெபம் அதிகமாகத் தேவை. தினமும் ஒரு 5 நிமிடங்கள்** தேவனுடைய கூடார **வேலைக்காக, ஜெபக் கோபுரத்திற்காக, கர்த்தர் தேவைகளை சந்திக்க ஜெபியுங்கள்.**

**இந்த தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காகக் காணிக்கை அனுப்ப நீங்கள் கர்த்தரால் ஏவப்பட்டால், இங்கே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

### காணிக்கை அனுப்ப...

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries - Sri Lanka, |
| A/c No: | 7010 1000 7680 |
| Bank Name: | Hatton National Bank PLC. |
| Branch: | Nawam Mawatha - Colombo - 02. |
| Swift Code: | HBLILKLXXXX. |

'www.jesusredeems.com/donation.php' என்கிற எமது இணைய தளத்தின் மூலமாகவும் நீங்கள் காணிக்கை செலுத்தலாம். - உங்கள் சகோதரன்

Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA. (Ph: 011 293 0152, 071 437 1111)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெத்செமனே ஜெப மையம்
GETHSEMANE PRAYER CENTRE

உங்கள் சிறையிருப்பு மாற வேண்டுமா?
## தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

# வத்தளையில்

தினமும் காலை 9:00 மணிமுதல்,
மாலை 6:00 மணிவரை.

தனியாக...
குழுவாக...
சபையாக...
ஜெபிக்கலாம்...

## நடைபெறும் ஊழிய விபரங்கள்

**பெண்கள் ஜெபம்!**
(வியாழக்கிழமைதோறும்)
10:00 A.M. – 1:00 P.M.

**உபவாச ஜெபம்!**
(சனிக்கிழமைதோறும்)
10:00 A.M. – 1:00 P.M.

**குடும்ப ஆசீர்வாத கூடுகை!**
(ஒவ்வொரு மாதமும் போயா தினத்தன்று)
10:00 A.M. – 1:00 P.M.

**மாணவர்கள் கூடுகை!**
(2வது, 3வது சனிக்கிழமைதோறும்)
4:00 P.M. - 5:00 P.M.



**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின் செய்திகள் அடங்கிய சி.டி.க்கள், புத்தகங்கள் கிடைக்கும்.

கிளை அலுவலக முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.*

உங்கள் அவசர ஜெப அழைப்பிற்கு 011 – 2930 152, 071 437 1111 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.

ஜெபியுங்கள்! சிங்கப்பூரில் 'இயேசு விடுவிக்கிறார்'

**12 மணி நேர - திறப்பின் வாசல் உபவாச ஜெபம்!**
நாள்: 2017 செப்டம்பர் 8 (வெள்ளி)
நேரம்: காலை 9:00 - இரவு 9:00.
Place: St. Andrew's Cathedral, 11 St. Andrew's Road 178959, Nearest MRT Station: City Hall interchange (Exit B).

**விடுதலைப் பெருவிழா!**
இடம்: Singapore Khalsa Association, 2 Tessensohn Road, 646, Nearest MRT: Farrer Park (Exit B) Singapore 217
நாள்: 2017 செப்டம்பர் 9, 10 (சனி, ஞாயிறு)
நேரம்: மாலை 7:00 - இரவு 10:00.

**பெண்கள் சிறப்புக் கூடுகை!**
நாள்: 2017 செப்டம்பர் 6 (புதன்) நேரம்: மாலை 7:30 மணிக்கு.
இடம்: சிமிர்னா அசெம்ப்ளி, 3 Yishun Street 11.

தொடர்புக்கு: Bro. Samuel Sathiyanathan - 9735 7763, Bro. Julius - 8125 7634, Bro. Barnabas - 9027 2341.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணத் தவறாதீர்கள்!

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்!



**ஏஞ்சல் டி.வியில்** தினமும் காலை 7:30 - 8:00, இரவு 11:30-12:00.

**செவ்வாய்கிழமை தோறும் காலை 10:00 - 10:30.**

**சனிக்கிழமை தோறும் மதியம் 2:30 - 3:00.**

**சுவர்க டி.வியில்**

ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

பாடல்கள், நாடகங்கள், சாட்சிகள் மற்றும் பல... ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

**Dialog TVயில்** *(God Channel)*

ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.



**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின்

தேவ செய்திகளைக் கேட்டு,

*ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!*

PRINTED BY S. A. PRINTERS, 57/3, LOTUS GROVE, THIMBIRIGASYAYE, HENDALA

Registered in the Department of Posts of Sri Lanka under QD/119/News/2017